

மின்சார வல்லுநராகிய
எடிசன் தாம் இயற்றிய புதுப்புனைவுகளின்
நடுவண் இருத்தல்

9/5

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.


| | | |
|---|---|---|
| சிலம்பு ௯ | மெய்கண்டான்யாண்டு-௭௱அ வைகாசித் திங்கள் 1931ஆ மேமூ—ஜூன்மூ | பரல் ௫ |


திருச்சிற்றம்பலம்

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

(பதவுரை.)

மண்ணில்—(இந்த) நில உலகத்தில்

வைகலும்—நாள் தோறும்

நல்ல வண்ணம் வாழலாம்—நல்ல வகையாக வாழலாம்

எண்ணில்—நினைத்துப்பார்த்தால்

நல்லகதிக்கு—நன்மையான வீடுபேற்றினை அடைதற்கும்

யாதுமோர் குறைவிலை—யாதொரு குறைவும் இல்லை.

(ஏனென்றால்)

கண்ணில் நல்லஃது—கண்ணினாற் பார்க்க அழகாயிருப்பவைகளெல்லாம்

உறும்—சேர்ந்திருக்கின்ற

கழுமல வளநகர்—கழுமலம் என்னும் செழிப்பான சீகாழி நகரின் கண்

199645



பெருந்தகை—மிக்க பெருமையுடையோனாகிய சிவபிரான்

பெண்ணினல்லாளொடு—உயிர்களுக்கு இன்பம் தழைக்கச் செய்கின்ற அருள் ஆற்றலாகிய உமாதேவியோடு

இருந்தது—இருக்கின்றான்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தலாவது முதலாவது ஒருவன் உலகில் கட்டு நிலையில் (பெத்த நிலையில்) மலத்தின் வழி நின்று உதவி செய்யும் மறைப்பு வலி (திரோதான சத்தி) யின் வயப்பட்டு அந்தத் திருவருளை நினைந்து உலகில் பயன் கருதிச் செய்கின்ற அறவழியில் வழாது நின்று அதனால் அடையத்தக்க உலக இன்பம் நுகர்ந்து வாழ்தலாகும். இந்தக் கட்டு நிலையில் ஒருவன் இவ்வாறு உலகில் வாழ்தல் அவன்பின் கட்டு விடுதிபெற்ற வீட்டு நிலையில் சிவபிரானுடைய திருவருளை நேரே பெற்றுச் சிவகதியாகிய வீடு பேற்றினை அடைதற்குத் தகுதியினைப் பெறுவிக்கும் வழியாகும்.

நல்ல வகையாக வாழ்தலாவது கட்டு நிலையில் உலக இன்பத்தை நெறிக்குட்பட்டு நுகர்ந்து வாழ்தலாகும். அவ்வாழ்வு பின் வீடு பேற்றினைப் பயத்தலால் நல்லது ஆகின்றது.

நல்லது என்பது நல்லஃது என ஆய்த அளபெடை பெற்றது.

கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்-கண்ணாற்பார்ப்பதற்குக் கண் கவரும் இனிய பொருள்களெல்லாம் காணப்படும் கழுமலநகர். சிவபிரானது அருள் பார்க்கப்படும் பருப்பொருள்களிலும் விளங்கப் பெற்ற நகர் என்பது கருத்து. இது நகரச்சிறப்பு.

பெருந்தகை அன்மொழித் தொகை.

இப்பாட்டினால் சிவபிரான் தன்னின் வேறல்லாததும், தன்னை விட்டுப் பிரியாததுமாகிய அருளாற்றலாகிய உமாதேவியோடு திருக்கோயில் திருமேனி கொண்டருளி யிருத்தலானது மக்களுக்கு உலகவாழ்வில் முதலாவது உலக இன்பத்தைக் கொடுத்துப் பருவ முதிரச்செய்து முதிர் பருவம் வந்தபின் நேரே அருள்செய்து வீட்டின்பத்தைக் கொடுத்து உய்விக்கும் பொருட்டேயாம் என்பது பெறப்பட்டது. மக்களாகிய நாம் இறைவனது அருளைப் பற்றி நின்று அதன்வழி ஒழுகுவோமானால் நமது அறிவுக்குத்தகுந்த இன்பத்தை அடைதல் திண்ணம்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

---



# நால்வரும் கல்வெட்டுகளும்

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், B.A., B.L.

## III. சுந்தர மூர்த்திகள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சரித்திரம் பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட சருக்கத்திலும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும், கழறிற்றறிவார் புராணத்திலும், வெள்ளானைச் சருக்கத்திலும் கூறப்பெற்றிருக்கின்றது. மேலும் சிலர் கூறுகிறதைப் போல் பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணமே சுந்தரமூர்த்திகளுடைய புராணமாகவும் அதன் கிளைப் புராணங்களாக ஏனைய நாயன்மார்களுடைய சரிதங்கள் வந்தன ஆகவும் கொள்ள இடமுமுண்டு. அவரது சரித்திரத்தின் சில கூறுகள் கொடுமுடிப் புராணம், திருமுருகன்பூண்டிப் புராணம், அவிநாசிப் புராணம், திருத்துடிசைப் புராணம், பேரூர்ப் புராணம் முதலான நூல்களிலும் சுந்தரர் வேடுபறி முதலான சிறு நூல்களிலும் காணலாம். கர்ண பரம்பரைக் கதைகளும் ஆங்காங்குச் சொல்லுவார்கள். அவருடைய பெருமையை நால்வர் நான்மணி மாலையில் காணலாம். அவர் அருளிய தேவாரப் பதிகங்களிலிருந்து சரித்திரப் பகுதிகளை உட்சான்றுகளாகக் கொள்ளலாம்.

சுந்தரமூர்த்திகள், அப்பர் சம்பந்தர் என்ற இரு பெரியார்களுக்குப் பின்னர் இருநூறு ஆண்டுகள் கழித்து அவதரித்தனர் என்று கருதப்படுகின்றார். அப்பர் சம்பந்தர் காலத்தில் ஜைனமேம்பாடு அதிகமாக இருந்து அதனோடு அப்பெரியார்கள் வாதாடி வெல்ல வேண்டி யிருந்தது. அவர்கள் காலத்திலேயே அம்மதம் தலையெடுக்க முடியாதபடி அமிழ்ந்து விட்டது. ஆகவே அவர்களுக்குப் பின்னர் இருநூறு ஆண்டுகட்குப் பின் அவதரித்த சுந்தரர் காலத்தில் சமண ஆதிக்கம் இருக்கவில்லை. ஏதோ ஒன்றிரண்டு இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் அம்மதத்தைப்பற்றிச் சுந்தரர் கூறவும் இல்லை. சுந்தரர் அவதரித்த போது பிற மதங்களைக் கண்டிக்க வேண்டிய அவசியம் இன்றிப்

பல அற்புதங்களை இயற்றிச் சிவபெருமான் அருளை வியந்து சைவ சமயத்தைப் பரவச் செய்வதே அவர்தம் ஜீவிய காரியமாகக் கொண்டனர்.

சுந்தரமூர்த்திகள் தமிழ் நாட்டிலே நடுநாடென்னும் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்ற தலத்தில் அவதரித்தவர். இத்திருநாவலூர் அப்பர் சுவாமிகள் அவதரித்த திருவாமூருக்குச் சமீபத்தில் தற்காலத்தில் திருநாமநல்லூர் என்ற திரிபுப் பெயரோடு விளங்குகிற ஓர் ஊர். அவ் ஊரில் அவர் ஆதிசைவ குலத்தில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் பிறந்தவர். நம்பி ஆரூரர் என்ற பிள்ளைத் திருநாமம் பூண்டு ஒரு நாள் தெருவில் விளையாடிக்கொண் டிருக்கையில் அவ்வழிச் சென்ற அந்நாட்டரசன் நரசிங்கமுனையர் அவர்மீது ஆசையுற்று அவர் தாய்தந்தையர் அனுமதி பெற்று அவரை அபிமான புத்திரராக வளர்த்து வந்தார். ஆரூரருக்கு வயது வந்த காலத்தில் அடுத்த ஊரான புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியரின் புதல்வியை மணம் பேசி மணப் பந்தரில் மணச் சடங்குகள் நடத்தத் தொடங்கினார்கள். அப்போது ஒரு முதியவர் தோன்றி இம் மணமகன் தன் அடிமை என்றும் தன் அனுமதியின்றி மணம் செய்துகொள்ளக் கூடாது என்றும் தடுத்தனர். அதைக் கேட்டுப் பரிகசித்து நம்பி ஆரூரர் "அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் உண்டோ? இவன் பித்தனோ?" என்று மறுத்தனர். என்றாலும் முதியவர் ஓர் ஓலையைக் காட்டித் தன் வாதத்தை நிரூபித்தார். ஆரூரர் அவ் ஓலையைக் கிழித்தெறிந்தும் முதியவர் விடாதவராய் வாதாட, அவர் சொன்ன ஊராகிய வெண்ணெய் நல்லூருக்குச் சென்று அவ்வூர்ச் சபையோரிடம் முறை சொல்ல, அவர்களும் எல்லாம் ஆராய்ந்து முதியார் வாதத்தை ஏற்றுக் கொண்டார்கள். உடனே ஆரூரர் முதியவரை "உமது வீடு எது?" என்று கேட்க, அவர் அவ்வூர்ச் சிவாலயத்திற்கு இட்டுச் சென்று அருட்டுறை என்ற அவ்வாலயத்துள் மறைந்தருளினார். உடனே நம்பி ஆரூரர் அச்செய்தி யெல்லாம் ஈசன் தன்னை தடுத்தாட்கொள்ளச் செய்ததே என்று வியந்து பித்தனைப் போல் திருவிளையாடல் செய்ததினால் அப்-



பெயர் கொண்டே "பித்தா பிறை சூடி" என்று பாடினார். இத்தேவாரத்தில் அருட்டுறை என்ற ஆலயத்தின் பெயர் வருதல் காண்க. அதுவரையில் ஈசன் ஞாபகமின்றி அப்போது வேறு யாரும் பெறலாகா அருள் தாம் பெற்றதை,

"நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னை
பேயாய்ப் பிறந்தெய்த்தேன் பெறலாகா அருள் பெற்றேன்."

என்று கூறி வியந்துள்ளார். ஈசனுக்கு அடியனாகி மணம் நின்று விடவே அப்படியே ஈசனன்பு இழுக்க ஆலயங்கள் தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு ஈசனை வழிபட்டுச் சென்றார்.

அவ்விதம் பல தலங்களைத் தரிசித்துச் செல்லுகையில் சித்தவட மடத்தில் அவர் நித்திரை செய்யும்போது ஈசனுடைய திருவடி தீட்சை கிடைத்தது. அதனை வியந்து

"எம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல் வைத்திடும் என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்."

என்று பாடியுள்ளார். பிறகு சிதம்பரத்தில் சபாநாதரைத் தரிசிக்கையில் திருவாரூருக்கு வரச் சொல்லி அருளுண்டாகப் பல தலங்களையும் தரிசித்து விட்டு அங்குச் சென்றனர். சுந்தரர் தாம் வெளிப்போந்த கோலமான மணங்கொண்ட கோலத்துடனே இருந்தார். உலகத்தோரும் அவரைத் தம்பிரான் தோழர் என்று அழைத்தனர். திருவாரூரில் வான்மீகநாதரைத் தரிசித்து வருகையில் அவ்வாலயத்தே நாடோறும் தரிசித்து வந்த பரவையார் என்ற நங்கையைக் காண, இருவரும் காதல் கொண்டார்கள். அன்று முதல் ஈசன் அருள்பெற்று ஊரார் சம்மதிக்க மணம் பூண்டு இருவரும் ஒருமிக்க வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்கள் வீற்றிருந்ததைக்கண்டு அவர்களுக்குத் தான் அடியன் என்று காட்டத் "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்ற திருத்தொண்டத்தொகை பாடினார். இப்பதிகத்தினால் அவருக்கு முன்னால் அவதரித்த சகல சிவனடியார்கள் பெயர்களும் நிலை நிறுத்தப் பெற்று அழியாது நின்றன. இப்பதிகத்தை ஆதாரமாக்கிக்

கொண்டுதான் நம்பியாண்டாரும் சேக்கிழாரும் நாயன்மார்கள் சரிதங்களை வரைய ஆரம்பித்தார்கள்.

ஒருகால் நாட்டில் பஞ்சம் உண்டாக, அடிகளுக்கு உணவுக்கு அளித்து வந்த குண்டையூர்க்கிழார் என்பவர் வருத்தமுற, ஈசனருளால் நென்மலையைப் பெற்றார். அதனைத் தம் தேவாரத்தில் "குண்டையூர்ச் சில நெல்லும் பெற்றேன்" எனக் குறித்துள்ளார். பிறகு கோட்புலி நாயனார் என்ற வேளாளர் தம் இருமக்கள் சிங்கடியார், வனப்பகையார் என்ற பெண்மணிகளை ஏற்றுக்கொள்ளக் கேட்க அவர்களை தம் மக்களாகப் பாவித்துத் தம் தேவாரத்தில் அவர்களைச் "சிங்கடியப்பன்" "வனப்பகையப்பன்" என்ற சொற்களால் பாடிவைத்துள்ளார். அவர்க்கு மக்கள் மீதுள்ள அன்பை இஃது எடுத்துக் காட்டுகிறது. அடிக்கடி ஈசனைப் பாடிப் பொன் பெற்றுப் பரவையாருக்குக் கொடுத்து வந்தனர்.

பிறகு பல தலங்களையும் தரிசித்துத் தொண்டை நாடு சென்று திரு ஒற்றியூரை அடைந்தனர். அங்கே கன்னிமாடத்திருந்த சங்கிலியாரை ஆலயத்தில் கண்டு ஆசையுற்று மகிழடியில் சபதம் செய்து மணம் செய்துகொண்டனர். இவ்வுற்சவம் திருவொற்றியூரில் இன்னும் நடைபெறுகின்றது. பிறகு திருவாரூரை நினைந்து தெற்கே சென்றனர். சபதம் தவறினதால் கண்ணை இழந்து ஈசனைத் துதித்தலாய் மறுபடியும் அதைப் பெற்றனர். பின்னர் திருவாரூர் அடைந்து பரவையாரிடம் செல்ல, அவர் மறுத்ததினால் ஈசனைத் துதிக்க, அவனருளால் ஊடல் தவிர்ந்து இருவரும் இன்புற்றனர். அப்போது ஏயர்கோன் கலிக்காமர் இச்செய்தியைக் கேட்டு சினமுற்றிருக்க அவர்க்குச் சூலைநோய் வந்த காரணத்தைக் கொண்டு இருவரும் நட்புற்றனர்.

அப்போது சேரநாட்டில் கொடுங்கோளூரில் அரசாண்டிருந்த சேரமான் பெருமாள் நம்பி ஆரூரரைக்கண்டு நட்பு பூண்டனர். இருவரும் பல தலங்களைத் தரிசித்துச் சேரநாடடைந்து சிலகாலம் வசித்த பிறகு ஆரூரர் திருவாரூர் அடைந்தனர். மறுபடியும் அவர் கொங்கு நாடடைந்து அவிநாசியில் முதலை



வாய்ப் பிள்ளை உமிழச் செய்தனர். அதனைத் தம் தேவாரத்தில் "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று குறித்திருக்கிறார். பின்னர் சேரநாடு சென்று சேரமானிடம் பெற்ற பொருளைத் திருமுருகன்பூண்டியில் பறிகொடுத்து "எல்லைகாப்ப தொன்றில்லை யாகில் நீர் எத்துக்கிருந்தீர் எம்பிரானீரே" என்று பாடிப் பொருள் மீண்டும் பெற்றார். பிறகு சேரநாடு சென்று சேரமானோடு சிலகாலம் இருந்து ஈசனைப் பாடி இருவரும் கைலாயம் அடைந்தனர். இச்சரித்திரத்தில் இயற்கைக்கு மாறாகத் தோன்றும் பல அற்புதச் செயல்கள் காணப்படுகின்றன. அவைகளை எவ்விதம் நம்புவது என்று சந்தேகமிருப்பினும் அச்செயல்களைக் குறிக்கும் பாடல்களிலுள்ள வாசகங்களைக் கண்ட பிறகு அவைகளை மறுக்காத நிலையில் இருக்கிறோம். இவ்வற்புதச் செயல்கள் ஒரு புறமிருக்க, இவர் பாடல்களில் அக்காலத்து நடவடிக்கைகளைக் குறிக்கும் வாசகங்கள் அதிகம் இல்லாவிடினும் சிலவாவது கிடைக்கின்றன. அவைகளை இனி ஆராய்வோம்.

1. நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
 நாவினுக் கரையன் நாளைப் போவானும்
 கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
 கண்ணப்பன் கணம் புல்லனென் றிவர்கள்
 குற்றஞ் செய்யினும் குணமாக் கருதும்
 கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
 பொற்றிரண் மணிக் கமலங்கள் மலரும்
 பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே.

—திருப்புன்கூர்.

நாவின் மிசை யரையன் னொடு தமிழ் ஞான சம்பந்தன்
 யாவர் சிவனடியார்களுக் கடியான் அடித்தொண்டன்.

—திருக்கேதாரம்.

இவைகளிலும் திருத்தொண்டத் தொகையிலும் திருநாவுக்கரசர், ஞான சம்பந்தர் இவர்களைப் பாடியுள்ளதால் அவர்களுக்குப் பின் சுந்தரர் தோன்றியுளல் வேண்டும்.

2. கார்கொண்ட கோடைக்
 கழறிற்றறி வார்க்கு மடியேன்"

—திருத்தொண்டத் தொகை

என்றதில் கழறிற்றறிவார் என்றது சேரமான் பெருமாள் நாயனாருடைய பெயர். "கடலங்கரைமேல் மகோதை அணியார் பொழில் அஞ்சைக் களத்தில்" சுந்தரரும் சேரமானும் பல காலம் வசித்தவர்கள். அங்கே இருவரும் கைலாயம் சென்ற போது சுந்தரருக்கு வெள்ளையானை வர, அதைக்குறித்து அவர்,

"மண்ணுலகிற் பிறந்து நம்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறாத தொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை யுத்தமனே."

என்று பாடியிருக்கிறார். அக்காலத்தில் சேரமான் பாடிய கைலாய நாதர் ஆதியுலாவும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அச் சேரமான் கோடை வள்ளலாதலால் மதுரை இறையனார் திருமுகப்பாசுரம் கொடுக்கப் பாணபத்திரருக்குச் சேரமான் பொருளுதவி புரிந்தார். அக்காலத்து மதுரை மன்னன் பெயர் வரகுணன். சிலாசாசனங்களின்படி இரண்டு வரகுணர்கள் பாட்டனும் பேரனுமாக இருந்திருக்கிறார்கள். ஒருவன் 840க்கு முந்தியும் மற்றவன் 862-லும் இருந்தவர்கள். இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியம் என்ற இடத்தில் அபராஜிதனோடு போர் புரிந்து திருவிடை மருதூரில் தங்கிச் சிவபிரானிடம் அளவிறந்த பக்தி செலுத்தியவன். இவன் பக்தியின் மேன்மையை வாதவூரடிகள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி இவர்கள் வியந்திருக்கின்றனர். அப்பரம பக்தனைப் பற்றிச் சுந்தரர் பாடாததினால் அவனுக்கு முந்தி சுந்தரர் இருந்திருக்க வேண்டும். ஆகவே சுந்தரர் முதல் வரகுணன் காலத்தவராக இருத்தல் வேண்டும்.

3. மேலும் சேர வம்சத்தில் உதித்தவர்களில் கடைசி மன்னன் சேரமான் பெருமாள் நாயனார். இவர் மகம்மதிய மதத்தைத் தழுவிக் கடல்மீது மெக்காவிற்குச் சென்றதாக ஒரு கதை வழங்குகிறது. பர்கூர் என்ற இடத்தில் ஒரு பள்ளிவாசலும் இவர் கட்டினதாக கர்ண பரம்பரை உண்டு. ஆனால் பெரிய புராணத்தின்படி ஞானஉலா முதலியவை பாடிச் சுந்தரரோடு இவர் கைலாயம் சென்றதாகத் தெரிகிறது. சுந்தரரும் கைலாயத்தில் பாடிய திரு நொடித்தான் மலைப் பதிகத்தை,



"ஆழி சூழ் அரையா
அஞ்சையைப்பர்க் கறிவிப்பதே"

என்று சொல்லிக் கடலரசனிடம் அனுப்பியதாக அவர் வாக்காலே தெரிகிறோம். ஆகையால் கடல் மார்க்கமாகச் சென்றதை மெக்காவிற்குச் சென்றதாகப் பாவித்தல் கூடும் அல்லவா? சேரமான் ஆட்சி விட்டுச் சென்றது 825 கி. பி. என்பர். இது கொல்லம் ஆண்டின் ஆரம்பமாகும்.

கொல்லமாண்டிற்கு வேறு காரணம் கூறப்படினும் சேரமான் கைலாயம் சென்றது ஒரு முக்கிய காரணம் ஆகும். ஆகவே சுந்தரரும் 825-க்குச் சமீப காலத்தில் கைலாயம் அடைந்திருக்கலாம்.

4. "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கு மடியேன்"

என்று சுந்தரர் நிகழ்காலத்தில் பாடியுள்ளதால் காடவன் அல்லது பல்லவ அரசன் கழற்சிங்கர் என்பவர் அவர் காலத்தில் இருந்திருக்க வேண்டும். பல்லவர்களில் கோப்பெருஞ் சிங்கன் முதலாக "சிங்கன்" இறுதி பெற்ற பெயர்கள் உண்டு. அவன் பிற்காலத்தில் ஆண்டவன். 8, 9 நூற்றாண்டுகளில் இவ்வித சிங்கப்பெயரும் கழல் என்ற சுத்தத் தமிழ்ப் பெயரும் கொண்ட பல்லவ நாமங்கள் கிடையா. ஆகவே இப்பெயர் ஒரு காரணப்பெயராக இருத்தல் வேண்டும். அக்காலத்தில் அரசு புரிந்த பல்லவன் பெயர் நந்திவர்மன். தொண்டைநாடு, நடுநாடு அவன் ஆட்சியில் இருந்தன. அதை ஒட்டித்தான் கச்சி மேற்றளிப் பதிகத்தில் சுந்தரர் "பாரூர் பல்லவனூர் மதிற் காஞ்சிமாநகர்வாய்" என்று பல்லவரைப் பெருமைப்படுத்திப் பாடியிருக்கின்றார். அந்நந்திவர்மனைக் கி. பி. 804-ல் ராஷ்டிர அரசன் கோவிந்தன் III என்பவன் படையெடுத்து வெற்றி பெற்றுக் கப்பம் வாங்கி வந்தான். அப்போது நந்திவர்மன் செல்வாக்கு குறைய, அவன்கீழ் இருந்த சிற்றரசர்கள் அவனுக்குத் திறை கொடுக்க மறுத்திருப்பார்கள். இதனைச் சுந்தரர் கோயிற்றிருப் பதிகத்தில்,

"மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலம்"

என்றதில் குறித்திருக்கின்றார். ஆகவே சுந்தரர் அவ்வரசன் காலத்தினர் என்று கூற இடம் இருக்கிறது. இவ்வரசன் சிவ பக்தி கொண்டவன். இவனே ஆலம்பாக்கம் கைலாசநாதர் ஆலயத்தில் ஒரு இலிங்கம் தாபித்து அந்த இலிங்கத்திற்கு நந்தி இலிங்கம் எனப்பெயர் தந்தவன். (723/109) இதைக்கொண்டு சுந்தரர் இவ்வரசனை அடியார்களில் ஒருவனாகச் சேர்த்துப் பாடியிருக்கக் கூடும். ஆனால் கழற்சிங்கன் இலிங்கம் தாபித்ததாகப் பெரிய புராணத்தில் சொல்லக்காணோம்.

5. மேலும் கழற்சிங்கன் இந்த நந்திவர்மன் அல்லன் என்றும் இரண்டாம் நரசிம்மன் என்ற ராஜசிங்கன் என்றும் கூறுவர். இவ்வரசன் காஞ்சி கைலாசநாதர் கோயிலையும், ஐராவதேசுவரர் ஆலயத்தையும், மாமல்லபுரம் ஆலயங்களையும் கட்டினவன். ஆகவே, இத்தனைச் சைவத்தொண்டு செய்தவனே கழற்சிங்கராயிருக்கலாம் என்பர். ஆனால் பெரிய புராணம் அக்கழற்சிங்கர் ஆலயம் எழுப்பினதாகக் கூறவில்லை யாதலாலும், இராஜசிங்கன் "திறைகொடா மன்னர்" தன்கீழ் இருக்கத்தக்க நிலையில் இல்லாது மிகுந்த பராக்கிரமசாலி ஆதலாலும், அவனாட்சியில் குழப்ப மில்லாதிருந்ததினாலும் சுந்தரர் காலத்து அரசன் இந்த இராஜசிங்கனாயிருத்தல் ஆகாது என்று எண்ண இடம் ஏற்படுகிறது.

6. சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்திகளும் மதுரை சென்றபோது அங்கு மாமனார் அகத்திற்கு வந்திருந்த சோழனையும் அவன் மாமனாரான பாண்டியனையும் சந்தித்ததாகச் சேக்கிழார் "தென்னவர் கோன் மகளாரைத் திருவேட்டு தொன் மதுரை நகரின்கண் ணினிதிருந்த சோழனார் முன்னரே அன்னவர்க ளுடன்கூட அணையவருங்கூடி மன்னுதிரு ஆலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார்" என்று கூறுகின்றார். ஆகவே, சோழரும் பாண்டியரும் அக்காலத்தில் நட்போடு வாழ்ந்தார்கள்



எனத் தெரிகிறது. அக்காலத்திற்கு முந்தி பல்லவ ஆட்சி சிறப்புற் றிருந்தது. சோழ பாண்டியர் பலஹீன முற்றிருந்தார்கள். ஆகவே பல்லவரை வெல்லும் பொருட்டு உறவும் நட்பும் சோழ பாண்டியர்கள் கொண்டிருக்கலாம். அவ்விதம் கொண்டுதான் சிறிது காலத்திற்குள்ளாக பல்லவ சார்வபௌமத்தைத் தொலைத்தார்கள். உதயேந்திரச் சாசனங்களில் சோழபாண்டியர்கள் பல்லவர்கள்மீது நிம்பவனம், சூதவனம், அழுந்தூர், மண்ணை, வேம்பில் முதலான இடங்களில் பொருதார்கள் என்று கண்டிருக்கிறது. அக்காலம் 850 கி. பி. என்று ஊகிக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தை ஒட்டியும் சுந்தரனார் "பல்லவர்க்குத் திறைகொடா மன்னரை" என்ற அடி கூறியிருக்கலாம்.

7. இளவயதில் சுந்தரரை ஆதரித்த அரசன் நரசிங்க முனையரையர். அவர் நாடான திருமுனைப்பாடி நாட்டுஅரசர்கள் முனையரையர்கள் அல்லது முனையதரையர்கள் எனப் பட்டம் பெறுவார். அவ்வம்சத்தில் நரசிம்மன், இராமன் என்ற பெயர்கள் முறையே இடுவது வழக்கம். திருநாவலூர்ச் சாசனப்படி (356/02 சாசனம்) 954 கி. பி. யில் குலமாணிக்கன் இராமன் என்பவன் முனையதரையனாக இருந்தான். அவன் தகப்பன் நரசிம்மனாகவும், பாட்டன் இராமனாகவும்; முப்பாட்டன் நரசிம்மனாகவும், இருந்திருக்கவேண்டும். அந்த நரசிங்க முனையதரையன் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னிருத்தல் வேண்டும். அதாவது கி. பி. 850க்கு முந்தி இருந்த நரசிம்ம முனையதரையனே சுந்தரரை ஆதரித்தவர் எனக் கொள்ளலாம். இக்கொள்கைக்கு ஆதாரமாக திருநாவலூர்ச் சாசனங்களில் 338/02, 356/02, 362/02, 369/02 இவைகளை எடுத்துக் காட்டலாம்.

## II

முன்னமே சம்பந்தர் அப்பர் வரலாறுகளில் இராசராசச் சோழரும் அவர் மகன் இராசேந்திரச் சோழரும் உலகப் பிரசித்தி யடைந்து சோழர் ஆதிக்கத்தை வெளிநாடுகளுக்கும் செலுத்தித் தம் பிரபல்யத்தைப் பெருங் கோயில்கள் எழுப்பி அவைகளிற் பதித்து வைத்திருக்கிறதாகச் சொன்னோம். அவ்வரசர்கள் தாங்கள் செய்த தான தருமங்களைப் பதிப்பித்தது

மாத்திரமே யன்றி சைவ சமயாசாரியர்களின் உருவங்களைப் பிரதிஷ்டித்தும் அவைகளுக்கு ஆபரணங்கள் முதலியவை தந்தும் தம் சைவாபிமானத்தை வெளிப்படுத்தி யிருந்தார்கள். அவ்வாசிரியர்களுள் சுந்தரமூர்த்திகளும் ஒருவராவர். சுந்தரமூர்த்திகளோடு நங்கை பரவை நாச்சியாருடைய உருவமும் ஸ்தாபித்தது நோக்கத் தக்கது. சுந்தரர் பெரும் ஆசாரியராகப் பாவிக்கப் பெற்றதுமன்றி அவருடன் வாழ்ந்த உருத்திர கணிகையரான பரவை நாச்சியாரையும் மானிடர் போற்றத் தக்க நிலையில் வைத்துப்பிரதிஷ்டை செய்ததை நோக்கினால் ஆசாரியருடைய அந்த வாழ்க்கையை எந்த நிலையில் அக்காலத்து மக்கள் வைத்து நோக்கினார்கள் என்று அறிய முடியும். ஒருகால் அக்காலத்திலேயே சுந்தரரை ஆலால சுந்தரரின் அவதாரமாகவும் பரவை நாச்சியாரைக் கைலாயத்துக் கமலினியின் அவதாரமாகவும் பாவித்தனர் போலும். ஏனெனில் வெறும் மானிட சொரூபமாகப் பாவித்திருப்பின் பரவைநாச்சியார் ஆலயத்தில் தாபிக்கக்கூடிய அப்பெருமை வாய்ந்த செய்கைகளைத் தம் வாழ்நாளில் நடத்தியதாகத் தெரியவில்லை. இந்த ஸ்தாபனத்திற்குப் பிறகு சுமார் 100 ஆண்டுகளுக்குள் அவரது சரித்திரம் எழுதின சேக்கிழார் சுவாமிகள் அவ்வித அவதாரக் கொள்கைகளைத் தழுவிச் சரிதம் எழுதி உள்ளதால், இராசராசர் காலத்திலேயே அக்கொள்கை மனிதர் மனதில் ஊன்றி இருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். மேலும் பரவைநாச்சியார் உருவம் மட்டும் தாபிக்கப்பெற்றுச் சங்கிலி நாச்சியார் உருவம் விடப் பெற்றதின் காரணம் அறியக் கூடவில்லை. சங்கிலி நாச்சியார் மணம் திருவொற்றியூரில் நடந்தது. அச்செய்தி தஞ்சை மட்டும் எட்டாததினாலோ, அல்லது பரவைநாச்சியார் சுந்தரரோடு வாழ்ந்தபடி நெடுங்காலம் சங்கிலி நாச்சியார் வாழவில்லை என்பதினாலோ, அல்லது பரவை நாச்சியார் வாழ்க்கையில் நெல் கொணர்தல், சிவபிரான் தூது செல்லல், செங்கல் தங்கம் ஆதல் முதலான அற்புதங்கள் நடந்தாற் போலச் சங்கிலியார் வாழ்க்கையில் நடைபெறாததினாலே சங்கிலி நாச்சியார் உருவம் ஆலயத்தில் தாபிக்கப் பெறும் அளவு மகிமை பெறவில்லை போலும்.



மேற்கூறிய தாபனம் இராசராசர் I-ன் கடைசி ஆண்டான 1013-14 கி. பி.-யில் இராஜராஜேஸ்வர ஆலயத்துக் காணியாளரான ஆதித்த சூரியன் என்ற தென்னவன் மூவேந்த வேளான் என்ற பிரபுவினால் செய்யப்பட்டது. அச்செய்தி சுந்தரரைக் குறித்த மட்டில் அடியிற் கண்டவாறு செதுக்கப்பட்டிருக்கிறது.

(S 99 VA II No. 38)

உடையார் ஸ்ரீ ராஜராஜீசுரம் உடையார்க்கு ஸ்ரீ கார்பம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் ஸ்ரீ ராஜாஜீராசுரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளிவித்த செப்புப் பிரதிமங்கள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ரத்னங்கள் சரடு நீக்கித் தக்ஷிணமேரு விடங்கன் என்னும் கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை யெடுத்தும் கல்லில் வெட்டினபடி—பாதாதி கேசாந்தம் பதினேழு விரலே இரண்டு தோரை உசரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கனமாக எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார் ப்ரதிமம் ஒன்று, இவர் நின்ற இரு விரலரை உசரத்துப் பத்மம் ஒன்று இதனோடும்கூடச் செய்த எண்விரல் சமசதுரத்து மூவிரலே இரண்டு தோரை உசரத்து இவர் எழுந்தருளி நின்ற பீடம் ஒன்று பதினாறு விரல் நீளத்து இரண்டு திருக்கை யுடையராகக் கனமாக எழுந்தருளிவித்த நங்கை பரவையார் ப்ரதிமம் ஒன்று இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே இரண்டு தோரை உசரத்து பத்மம் ஒன்று. இதனோடுங் கூடச் செய்த அறுவிரலே இரண்டு தோரை சமசதுரத்து மூவிரல் உசரத்து பீடம் ஒன்று,..............

.... .... ....

.... .... ....

இவனே நம்பி ஆரூரனார்க்குக் குடுத்தன—உருத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐம்பத்தாறும் உருத்திராக்ஷம் ஐம்பத்தாறும் உட்பட நிறை எண் கழஞ்செய் ஒன்

பது மஞ்சாடிக்கு விலைகாசு இருபைத்தைந்து, இவனே நங்கை பரவையார்க்குக் குடுத்தன—திருக்கைக்காறை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினாற் பொன் முக்கழஞ்சு திருக்காற் காறை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினாற் பொன் முக் கழஞ்சு—மோதிரம் ஒன்று பொன் அரைக்கழஞ்செய் . மஞ் சாடியும் குன்றி

... ... ...

.... .... ....

இவன் எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார்க்குக் குடுத்தன-உருத் திராக்ஷம் பொன்னின் சரிகட்டிற்று ஒன்றும் நாண்படு கண் ணுங் கொக்கு வாயும் உட்பட நிறை கழஞ்செ எழுமஞ்சாடிக்கு விலை காசு மூன்று, இவன் எழுந்தருளிவித்த நங்கை பரவை யார்க்குக்குடுத்தன திருவொன்றுட்படப்ப ட்டைக்காறை ஒன்று பொன்முக்காலே குன்றி, இவன் எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார்க்குநித்த விநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து உடையார் ஸ்ரீராஜராஜீசுரமுடையார் தேவதானம் வெண்ணி நக ரத்தார் யாண்டு இருபத்தொன்பதாவது வரை குடுத்த பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்துக் கல்லில் வெட் டின திருக்கம்பி ஒன்று பொன்கழஞ்சே மஞ்சாடியுங் குன்றி திருக்கம்பி ஒன்று பொன்கழஞ்சே மஞ்சாடி திரள் மணிவடம் ஒன்று பொன் இருகழஞ்சே மஞ்சாடியுங்குன்றி திருக்கைக் காறை ஒன்று பொன்கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றி திருக்காற்காறை ஒன்று பொன்கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியாக இரண்டினாற் பொன் முக்கழஞ்சே முக் காலே மூன்று மஞ்சாடி. இவன் எழுந்தருளிவித்த நங்கை பர வையார்க்குக் குடுத்தன: திருக்கம்பி ஒன்று பொன்முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி திருக்கம்பி ஒன்று பொன் முக் காலே இரண்டு மஞ்சாடி.”

இச்சாசனத்தில் சம்பந்தரையும் அப்பரையும் தாபித்து அப்பிரதிமைகளுக்குப் பத்மம் காறை முதலியவைகள் தந்திருந்த போதிலும் நம்பி ஆரூரருக்கும் நங்கை பரவையாருக்கும் அதிக மாகப் பொருள்கள் உதவினதையும் வரிசைக் கிரமத்தில் நம்பி



ஆரூரரையும் நங்கை பரவையாரையும் முதலில் வைத்துப் பிறகு திருநாவுக்கரையர் திருஞான சம்பந்த அடிகளையும் வைத் திருக்கும் முறையையும் கவனிக்கவேண்டும். பெரிய புராணத்தி லும் முதலில் சுந்தரர் வரலாறும் பின்னால் நாவுக்கரசர் வரலா றும் அதற்குப்பின் சம்பந்தர் வரலாறும் இருத்தல் காண்க. மற்றும் இறுதியில் அப்புராணம் சுந்தரர் வரலாற்றில் எஞ்சியது சொல்லுகிறாற்போல, இந்தச் சாசனத்திலும் சுந்தரருடைய எஞ் சிய அணிகள் கடைசியில் சொல்லப்பட்டிருப்பதும் காணலாம். இதைத் தவிரச் சுந்தரருக்குக் கொடுத்திருக்கும் பிராதானியத் தின் பொருள் விளங்கவில்லை.

மேலும் 41-ம் சாசனத்திலும் அதே ஆதித்த சூரியன் செய்த தருமங்களும் நம்பி ஆரூரனார், திருஞான சம்பந்த அடி கள் திருநாவுக்கரைய தேவர் என்ற வரிசைக் கிரமத்தில் சொல் லப்பட்டிருத்தலும் குறிபிடத் தக்கது.

மேலும் திருவாரூரில் தியாகராஜ சுவாமி சந்நிதியில் உள்ள ஒரு கல்வெட்டின் பிற்பகுதியில் (73 of 90) S. I. I. Vol. IV & Vol II P. 153) வடமொழியில் மூவருடைய பிரதிமைகளும் அக் கோயிலில் தாபிக்கப் பெற்றிருந்த தாகவும் அவர்களுக்கு அன பாயன் என்ற குலோத்துங்கன் II என்ற அரசன் தருமம் செய்ததாகவும் கண்டிருக்கிறது. மூவர்களுடைய பெயர்களை வட மொழியில் பிரமபுரீசர் (சம்பந்தர்) வாகதிபதி (அப்பர்) ஸ்வஸ் வாமி மித்திரர் (சுந்தரர்) என்று கண்டிருப்பதோடு சுந்த ரரை ஆளுடைய பிள்ளையார் என்றும் அவர் தாயார் இசை ஞானியார் என்றும் அம்மாது சைவ சமயத்தில் ஞான சிவாச்சாரியர் குடும்பத்தில் கமலாபுரத்தில் (திருவாரூர்) பிறந்ததாகவும் கண்டிருக்கிறது. இதனால் இசைஞானியா ருடைய பிறந்த இடம் இன்னதென்ற அரும் செய்தியும் கிடைக் கிறது. மேலும் இவ்வரசன்தான் பெரிய புராணம் இயற்று வதற்காகச் சேக்கிழாருக்குப் பேருதவி புரிந்த அனபாயச் சோழன் என்றும் தெரிகிறது.

மேலும் இராஜராஜச் சோழர் காலத்திலேயே திருப்பதி

கம் பாடுவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்திருந்ததை முன்னரே சம்பந்தர் சரித்திரத்தில் கூறி யிருக்கிறோம்.

ஆகவே இக் கல்வெட்டுகளால் சோழர்களில் முக்கிய அரசர்கள் காலத்தில் சுந்தரருக்கும் அவர் தாயார் இசைஞானியாருக்கும், பரவை நங்கையாருக்கும் ஏற்பட்டிருந்த மதிப்பு, மகிமை, தெய்வீகத்தன்மை இவைகளை நாம் செவ்வனே அறியக்கூடும். (தொடரும்)

---

# குமரன் தலக் குறட் பா

[திரு. வ. சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள், M. A.]

ஐயடிகள் காடவர் கோன் நாயனர் திருவாய் மலர்ந்த க்ஷேத்திர வெண்பாவைப் படித்த நாள் முதல் குமரன் தலங்களுக்கும் இவ்வாறு ஒரு நூல் பெரியோர் யாருஞ் செய்திலரே என வருந்தினேன். சென்ற சிவராத்திரி தினம் திருநெல்வேலியிற் குறுக்குத்துறை என்னும் தலத்தைத் தரிசனஞ் செய்து மகிழ்ந்த பொழுது "எடுங்களத்தா என்னு முன் ஏழைமட நெஞ்சே நெடுங்களத்தான் பாதம் நினை" என்னும் அடிகள் பாசுரம் நினைவுக்கு வர, குறுக்குத் துறை என்பது குமரன் திருவருள் கூடுவதற்குக் குறுக்குத் துறை (குறுக்கு வழி)யாகும் என்னுங் கருத்து உதிக்க, குறுக்குத் துறைக் குமரன் திருவருளையே துணையாகக் கொண்டு குமரன் திருக்கோயில் கொண்ட தலங்களைப் புகழ்ந்து "குமரன் தலக்குறட்பா" என்னும் இந்நூலை இயற்றினேன். ஆசை காரணமாக யாக்கப்பட்ட நூலாதலின் ஆன்றோர் அருவருக்காது நூலைப் படித்து மகிழ்வர் என மயிலவன் திருவருளை நாடுகின்றனன்.

### காப்பு.

தும்பி முகவன் துணைசெய்வன் தன்னுடைய
தம்பி தலம்பாடு தற்கு.

1. திருப்பரங்குன் றஞ் சென்று சேவிப்போர் என்றும்
இருப்பரங்குன் சாமீப மே.



2. திருச்செந்திப் பிள்ளையைச் சேவிப்போர்க் கென்றுங்
கருச்சந்திப் பில்லையினி காண்.

3. திருவாவி னன்குடியைச் சிந்திப்போர் நிற்பர்
கருவாவி நீந்திக் கடந்து.

4. திருவே ரகத்தான் திருப்பெயரே என்றுங்
கருவே ரறுத்தான் கழறு.

5. குன்றுதோ றாடுங் குமர வெனத்துக்கங்
குன்றுதோ இல்லையோ கூறு.

6. பழமுதிர் சோலைப் பகவ! எனுமன்
பெழமுதிர் பத்தி யெழுமே.

7. தணிகைக்குச் சென்றால் தமியேன் வினைகள்
தணிகைக்கும் ஐயமுண்டோ சாற்று.

8. வெள்ளிகரம் வேணுமென்னும் வீணலைச்சல் வேண்டாதே
வெள்ளிகரம் போற்ற விரும்பு.

9. வள்ளிமலை வாழ்குமர வள்ளல்ப தாம்புயத்தை
உள்ளிமலை வாய்பிறவி யோர்ந்து.

10. கருவிரிஞ்சிச் சூழாக் கதியருள்வன் எந்தை
திருவிரிஞ்சைக் கோயிலமர் சேய்.

11. ஆண்டார்தப் பஞ்சேர் தறுமுகவன் தாள்நெஞ்சிற்
பூண்டார்குப் பாயவினை போம்.

12. சமரகோட் டப்பகடான் சாருமுனே அங்கை
தமரகோட் டந்தொழவே கூப்பு.

13. இளையனர் சூழிற் கிறியிற் படாதே
இளையனர் வேலூரை யேத்து.

14. பல்லக்கோட் டைப்புனைந்த பண்பன்சேய் வாழ்கின்ற
வல்லக்கோட் டைப்பதியை வாழ்த்து.

15. இருப்போரூர் வேண்டுதியேல் ஏழை மடநெஞ்சே
திருப்போரூர் நன்றெனவே தேர்.

16. மேருமங்கை சேர்ந்தவடி வேலன் கழலடிக்கே
சேருமங்கை சேர்வீர் சிவம்.

17. சேயூர்முருகன் திருப்புகழே சொல்ல என்றன்
வாயூறு மற்றிதுவாய் மை.

14

18. பெரும்பேறு வேண்டிடின் பேசுமின் என்றும்
பெரும்பேறு வாழ்முருகன் பேச்சு.

19. மலைமயிலங் கண்டு வணங்குபவர் என்றுந்
தலைமையிலங் கோங்கிடுவர் தாம்.

20. புள்ளிருக்கு வேளூர்ப் புலவன்முத் துக்குமரன்
உள்ளிருக்க இன்னலுண் டோ?

21. எந்தன் குடியாண்ட எந்தை குமரனமர்
கந்தன் குடிதொழுமென் கை.

22. இடைக்கழி வேலனையே ஏத்துமின் தீய
நடைக்கழி யாமை நலம்.

23. சிக்கலா னந்தஞ் சிதம்பரத்தின் செல்வனவன்
பக்கலா னந்தம் பயில்.

24. எட்டிகுடி கொண்டான் என்மனத்தே, நான்முகனைக்
குட்டிகுடி கொண்டான் கூத்து.

25. எண்கணன் சேவடியே எப்போதுங் காண்பதுவே
கண்கணன் பெற்ற கருத்து.

26. வயலூர் முருகன் மலரடிக்கே ஆட்செய்
இயலூர் மனம்பெறுநாள் என்று?

27. தேங்கோடு செங்கோடு செங்கோ டெனச்சொல்லின்
எங்கோடு மோஎன் இடர்.

28. கன்னிமலை வேடர்வள்ளி காந்தன் விரும்பியுறை
சென்னிமலை சேர்வாய் தெரிந்து.

29. பட்டாலி வாழ்குமரன் பாதந் தொழுதகசை
விட்டாலி டர்கள் விடும்.

30. கருதமலை பாலுண்ட காங்கேயன் வாழும்
மருதமலை வாழ்த்துமென் வாய்.

31. விராலி மலைமுருகன் வீடாம் எனச்சொல்
வராலிஃ தன்மை மதி.

32. பழநித்தண் டாயுத பாணி கழலைத்
தொழநித்தஞ் சேருஞ் சுகம்.

33. வம்பிடேள் நல்ல வழிகாண வேண்டினே
கும்பிடேள் குன்றக் குடி.



34. பிரான்மலையிற் சேய்கழலைப் பேணிப் பணியத்
தரான்மலையிப் பொல்லாச் சடம்.

35. கோடும்பைக் குமரனையே கூறுவோர் நெஞ்சில்
இடும்பைக் கிடமே இலை.

36. ஒழுகுமலை மொக்குள் உடலமென் றோர்ந்து
கழுகுமலை கைதொழுவாய் கண்டு.

37. துறுக்குத் துறையே குமர னருள்கூடக்
குறுக்குத் துறையாங் குறி.

38. இலஞ்சிக்குச் சென்றங் கிருத்தல் பிறவி
மலஞ்சிக்கு நீங்கும் வழி.

39. திருமலைவாழ் சேயின் திருவழகைக் காண்க
பொருமலையே போக்கும் பொருட்டு.

40. துள்ளியூர் பாம்பைத் தொடர்மயிலான் கூரயிலான்
வள்ளியூர் போற்று மகிழ்ந்து.

41. முதிர்காம மூடாது மூர்த்திப் பணிவாய்
கதிர்காம வேலன் கழல்.

---

# சிவஞான போதக் கருத்து

### இரண்டாவது சூத்திரம்

### மூன்றாவது அதிகரணம்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள். B. A.]

(௱௯௪-வது பக்கத் தொடர்ச்சி)

யும் வருகின்றன. தீவினையை விலக்கும் அறத்திறனும் நல்வினையை மேற்கொள்ளும் அறத்திறனும் சேர்ந்து முன் 81-வது பந்தியிற் கூறியபடி உயிரினுடைய நுண்மன உடலில் மனஅற நினைவுத்திறனும் (mental faculty) மனஅற உணர்வுத்திறனும் ஆக அமைந்து பின்வரும் நிலஉலக வாழ்வின் ஒழுக்கத்துக் கெல்லாம் அடி முதலாய் (basic source) உள்ளன. மிகுதியாய் நல்வினை செய்தல் ஏறி அதன் பயனாக உயிர் மிக்க இம்மை மறுமை இன்பத்தை நுகருங்காலத்திலும்

அவ்வின்பம் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின் அதற்குத் தெவிட்டுதலை (Satiety) யுண்டாக்கித் துன்பமாக மாறுகின்றது. நல்வினை பயனாகவும் துன்பம் உண்டாதலை உயிர் அறிந்த பொழுது அதற்கு இதுவரை உள்ளே வெளிப்படாமல் அடங்கியிருந்த நிலையான இன்பத்தில் (latent desire for ever-lasting happiness) நாட்ட முண்டாகிறது. இந்த நாட்டம் வலுவடைந்த பொழுது உயிரானது நிலையான இன்பம் எனப்படும் பேரின்பம் பிறப்பு இறப்பு உள்ள காலம் நீங்கும் வரை உண்டாகாது என்று அறிகிறது. இவ்வறிவின் பயனாகத் தீவினையைப் போலவே நல்வினையும் பிறப்பு இறப்புக்குக் காரணமாயிருத்தலால் நல்வினை தீவினை இரண்டும் ஒப்புமையாக (சமமாக)த் தவிர்க்கக் கூடியவைகள் என்று உயிர் அறிந்து உணர்கிறது. உயிர் இவ்வாறு இருவினைகளையும் துன்பத்தைக் கொடுக்கிற பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாக அறிந்து உணர்ந்து அவற்றைத் தனது நுண்மன உடலில் ஒப்பாக (சமமாக) எண்ணும் நிலையே இருவினையொப்பு நிலையாகும். இவ்வாறு இருவினைகள் உலக இன்பம் முன்னிலையாக உயிரைத் தமது வயப்படுத்தி ஒழுகச் செய்யும் வலி முற்றிலும் இழந்து நிற்கும் தன்மையே வினைமலம் பரிபாகம் அடைதலாகும்.

84. இனி மக்களுயிர் பிறப்பினால் எவ்வாறு ஆணவமல பரிபாகம் அடைகிறது என்பது கருதுவாம். உயிரை அநாதியே சேர்ந்துள்ள ஆணவமலமே மூலமலம் எனப்படும். இந்த ஆணவமலம் மறைப்பு நீங்கும் பொருட்டு முதல்வன் தனது பேரருளினால் உயிருக்கு உடல், உட்கருவி, உலகம் நுகர்வுப் பொருள்களை (தனுகரண புவன போகங்களை)க் கூட்டுவித்த பொழுது அது காலம் நியதி கலை வித்தை அராக தத்துவங்களால் இயக்கப் பெற்று முன் மலத்தினால் றடைப்பட்டிருந்த செயல் அறிவு வேட்கைகள் சிறிது விளக்கம் அடைகின்றது. அப்பொழுதும் ஆணவமலமும் மாயா தத்துவங்களையும் இருவினைகளையும் துணையாகக் கொண்டு உயிரைத் தொழிற்படுத்துகின்றது. மாயா தத்துவங்கள் அருள் விளங்குதற்கும் ஆணவமலம் சேர்தற்கும்



ஒரே இடமா யிருத்தலினாலே தான் உயிர் ஒன்றுக் கொன்று இகலுந் தன்மைத்தான இருவினைகளைச் செய்கின்றது. உயிர் நிலவுலக வாழ்வில் இருவினைகளைச் செய்து அவைகளினா லுண்டாகிற நுகர்வுக் கருத்துப் பொருள்களை (materials of ideas of experience) மேலே இறப்புப்பின் வாழ்வு நிலைப் பகுதியிற் கூறியபடி நிரய உலக வாழ்விலும் துறக்க உலக வாழ்விலும் மனதிலே வேலை செய்து நினைத்து (சிந்தித்து) ஒரு நிலையுள்ள மனஅற நினைவுத் திறனையும் (mental faculty) மனஅற உணர்வுத் திறனையும் (moral faculty) அடைகின்றது. இந்த மனஅற நினைவுத் திறனாலும் மனஅற உணர்வுத் திறனாலும் உயிருக்கு ஆணவமலம் மறைப்புச் சிறிதுதான் நீங்கியுள்ளது. இன்னும் உளதாகிய மலமறைப்பு நீங்குவதற்கு உயிர் மீளவும் நில உலக வாழ்வுக்கு வந்து முன்தான் அடைந்த மனஅற நினைவுத் திறனும் மனஅற உணர்வுத் திறனும் நடைமுறையிற் செயற்பட்டு வலுவடைய வேண்டி யிருத்தலு மல்லாமல் இனி நிரய துறக்க உலகங்களுக்குக் கொண்டு போதற்கு, புதிதாகவும் உலக நுகர்வுக் கருத்துப் பொருள்களை (materials of ideas of wordly experience) சேர்த்தல் வேண்டும். உயிருக்கு நில உலக வாழ்வு நில உலகில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்குப் பள்ளிக்கூடம் போலும். மாணவன் கல்விகற்று முடியும்வரை பள்ளிக்கூடத்துக்குப் போதல் இன்றியமையாது வேண்டப்படுதல் போல உயிர் மேலும் மேலும் மனஅற நினைவுத் திறனும் (mental faculty) மனஅற உணர்வுத் திறனும் பெற்று தக்க பருவம் அடையும்வரை நில உலக வாழ்வுக்கு வந்து உலக நுகர்வை (worldly experience) அடைதல் வேண்டும். வண்ணான் ஒருவன் அழுக்குப் புடவை யொன்றிலுள்ள அழுக்கைப் போக்குதற்கு அதனோடு உவர்மண் அழுக்கையுஞ் சேர்த்து வைத்து அழுக்குடன் உவர் மண்ணையும் ஒருசேரப் போக்குதல் போல முதல்வனும் உயிரிடமுள்ள ஆணவமல அழுக்கைப் போக்குகிறதற்கு அம்மலத்துடன் மாயாமல அழுக்கையும் வினைமல அழுக்கையும் ஒன்று சேர்த்து உயிரைப் பக்குவப் படுத்தி உயிருக்குப் பரிபாகம் வந்த காலத்தில் ஆணவமல

அழுக்குடன் மாயாமல அழுக்கையும் வினைமல அழுக்கையும் ஒரு சேரப் போக்குவன். ஆணவமல பரிபாகம் என்பது உயிருக்கு அநாதி கேவலத்தில் அறிவு வேட்கை செயல்கள் தொழிற்படாது தடுத்து அறியாமையைச் செய்யும் ஆணவமல வலியை மேலே கூறியவாறு தேய்த்துத் தேய்த்துக் கீழ்மடங்கச் செய்து கெடுத்தலாகும். பரிபாகம் என்ற சொல்லின் பொருள் முன் 83-வது பந்தியில் (para) விளக்கப்பட்டது.

85. மேலே கூறியவற்றால் மாந்தர்கள் முதல்வனது அருளைப் பெறுதற்குரிய பருவம் அடைதலுக்கு நில உலகக் கட்டு வாழ்வு இன்றியமையாது வேண்டப் படுவதென்பது பெறப்படுகின்றது. நில உலக வாழ்வும் அதற்குப் பின் நிகழும் நிரய உலக வாழ்வும் துறக்க உலக வாழ்வும் சேர்ந்தே மக்களுடைய உயிர் வளர்ச்சிக்கு (soul evolution)க் காரணமாயிருந்து அவர்களுக்கும் பாகம் வருவிக்கின்றன. முதல்வனது அருளை (அனுக்கிரக சத்தியை)ப் பெறுதற்குத் தக்க பருவம் உண்டாகும் வரை மக்கள் மறைப்புவலிவயப்பட்டு பிறப்பும் இறப்பும் அடைந்து வருகிறார்கள். ஆதலின் இப்பிறப்பு இறப்புக்கள் இயற்கை நிகழ்ச்சிகளாயுள்ளன. நில உலக வாழ்வு பயனுடையதாயிருத்தலுக்கு அஃது ஒரு குறியையும் அக்குறிக்கு ஏற்ற நெறியையும் அந்நெறிக்கு வாய்ந்த பண்புகளையும் உடையதாயிருத்தல் வேண்டும் என்று கூறுதல் அல்லாமல் ஒரு சாரார் கூறுதல்போல நில உலக வாழ்வு கிளிஞ்சிலில் வெள்ளிபோல பொய் (மித்தை) என்றும் அது தவிர்க்கப்பட வேண்டுமென்றும் சைவசமயங் கூறுகிறதில்லை. நிலஉலக வாழ்வானது “சிவனுய்யக் கொள்கின்ற ஆறு” என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சிக் கடைசிப் பாட்டிற் கூறியிருத்தல் காண்க. இதனுடன் மூன்றாவது அதிகாணம் முடிந்தது.

---



# பண்டைத் தமிழ்ச் சொற்கள்

## அந்தணன் (கசு)

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

(பரல் ௪, ாகூ௨-வது பக்கத் தொடர்ச்சி)

பண்டைத் தமிழ் மக்கள் கடவுளுக்கு வழங்கிவந்த சொற்களில் அந்தணன் என்ற சொல் ஒன்று. அச்சொல்லால் அவர்கள் கொண்டிருந்த கருத்துக்கள் யாவை என இக் கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. அந்தணன் என்ற பண்டைத் தமிழ்ச் சொல்லில் அடிச்சொல்லாய் விளங்குவது தண்மை என்பது. “தண்மை”க்கு முன்னிற்கும் அம் என்பது முன்னடைச் சொல் (prefix). பின்னிற்கும் அன் என்பது உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி உருபு. தண்மை என்னும் பண்புப் பெயர் அம் என்னும் முன்னடையுடன் சேருங்கால் அந்தண்மை என்றாயது. அந்தண்மை என்பதனுடன் அன் சேர மை விகுதி கெட்டு அந்தணன் என ஆகியது.

3. தண்மை என்னும் பண்புச் சொல் குளிர்ச்சி என்று பொருள்படும். “தண்மைதான் குளிர்ச்சி தாழ்வு” என்பது சூடாமணி நிகண்டு. சில மலையிடங்கள் தவிரத் தமிழ்நாடு பொதுவாய் வெம்மையாயிருத்தல்பற்றித் தமிழ்நாட்டு மக்கள் இயல்பாகக் குளிர்ச்சியையே இன்பம் பயப்பதாக விரும்புகின்றார்கள். இங்கிலாந்து முதலிய குளிர்ந்த இடங்களில் வெம்மையானது இன்பம் பயத்தல் காண்க (warmth of feeling). ஆதலின் தண்மை என்ற சொல் இன்பம் என்ற பொருளில் அவர்களால் வழங்கப்பட்டு வந்தது. இன்பத்துக்கு முதலாயுள்ளது அன்பு ஆதலின் அஃது அன்பு என்ற பொருளிலும் வழங்கப்பட்டு வந்தது. ‘தண்மை’ அன்பு என்று பொருள்படும் அளி என்ற சொல்லுடன் சேர்ந்து தண்ணளி என ஒரு சொன்னீர்மைப் பட்டுப் பேரன்பு அல்லது அருள் என்ற பொருளில்

பண்டைத் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வந்திருத்தல் காண்க.

4. இரண்டாவது பந்தியிற் கூறியபடி அமைந்த அந்தணன் என்ற சொல்லினுள்ள அம் என்பது அழகு என்று பொருள்படும். ஆகவே அந்தணன் என்பது அழகாக அன்பு செய்கிறவன் என்று பொருள்படும். பண்டைத் தமிழ் நூல்களில் அந்தணன் என்று வழங்கப் படுதலன்றித் "தண்ணன்" என்று தனியே வழங்கப்படுதலில்லை. பண்டைத் தமிழ் அறிஞர் உயிர்களின் நிலைமை அறிந்து அதற்குத் தக்கவாறு அழகாக அன்பு செய்தலே நற்பயனுடையதாகும் என அறிந்திருத்தலே தண்ணன் என்ற சொல்லைத் தனியே வழங்காதிருத்தற்குக் காரணமாகும்.

5. அந்தணன் என்ற சொல்லாற் பெறப்படும் அழகாக அன்பு செய்தல் என்பது என்ன? அச்சொல்லில் என்ன கருத்துக்கள் அடங்கியுள்ளன என்பது கருதுவாம். ஒரு சிலைக் கல்லில் செதுக்கப்பட்ட உருவப் பொருளொன்று அழகுடையதாய்க் காணப்பட வேண்டுமானால் அதன் பல உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமுள்ள அளவு உடையதாயும் அவ்வுருவப் பொருளின் மொத்த அளவுக்கு ஒவ்வொரு உறுப்பும் அதற்கு ஏற்ற அளவு உடையதாயும் இருத்தலே வேண்டும். அழகுப் பொருள் உயிர்ப்பொருள்களாக இருந்தால் உயிரில்லாத உருவப் பொருளுக்கு மேலே கூறியபடி உறுப்புகள் அமைந்திருத்தலுடன் உறுப்பு ஒவ்வொன்றும் அதற்கு உரிய தொழிலை மற்ற உறுப்புக்களின் தொழில்களோடொன்றுபட்டியைந்து எல்லா உறுப்புக்களும் சேர்ந்த உடலுக்கும் அவ்வுடலில் நிலவும் உயிருக்கும் நலந்தரும்படி செய்தல் வேண்டும். அதுபோலக் கடவுள் எல்லா உயிர்களிடத்தும் ஒப்புமையான (சமமான) பேரன்பு உடையவனாயிருந்தாலும் அவ்வன்பு ஒருயிரிடத்துச் செயற்படும் பொழுது அவன் அவ்வுயிரினுடைய நிலையை அறிந்து அது நலம் அடையும் வண்ணம் அதனுடனியைந்துநின்று அந்நிலைக்குத் தக்கவாறு அன்பு செய்கின்றான். அன்பு அறிவின் வழி செயற்படவில்லையானால் நலம்



உண்டாகாது. இவ்வாறு எல்லாம்வல்ல கடவுள் தனது பேரன்பைப் பேரறிவின்வழிப் பேராற்றலினால் உயிர்களுக்கு நலம் பயக்கும்படி வழங்குதலே அழகாக அன்பு செய்தல் ஆகும். இந்தப் பேரன்பு, பேரறிவு, பேராற்றல்களே அவனுடைய இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்திகளாகும். இவைகள் தமிழில் முறையே வேட்கைவலி அறிவுவலி செயல்வலி என்று கூறப்படும். இவ்வாறு அழகாக அளவு செய்தலே மேலே கூறப்பட்ட அந்தண்மை ஆகும். இந்த அந்தண்மை செந்தண்மை என்றுங் கூறப்படும். கடவுள் இந்த அந்தண்மையை உடையவன் எனப் பண்டைத் தமிழ் அறிஞர் அறிந்து அவனை அந்தணன் என்ற பெயரினாற் கூறினர். மூதறிஞர் திருவள்ளுவ நாயனார் கடவுளை "அறவாழி அந்தணன்" அதாவது அறக்கடலாகிய அந்தணன் என்று திருக்குறள் முதல் அதிகாரம் ௮-வது குறளிற் கூறினார். அறமின்றி அந்தண்மையும் அந்தண்மையின்றி அறமும் பயனுடையவாய் அமையா ஆதலின் அவர் அவ்வாறு கூறினார்.

6. கடவுளுடைய அந்தண்மைக்கு அவன் எல்லா உயிர்களும் மலத்தினின்றும் நீங்கித் தன்னைச் சார்ந்து பேரின்பம் அடைதல் போலாகும் என்ற அருள் நோக்கமே காரணமாகும். ஆதலின் பகுத்தறிவுடைய மக்கள் கடவுளை அருளுடையவன் என்று அவனிடத்தில் அதைச செய்து வழிபடல் வேண்டுமே அன்றிச் சினமுடையவன் கொடுமைசெய்கிறவன் என்று நினைத்து அச்சத்துடன் வழிபடுதல் கூடாது. "அன்பருக்கு அன்பனே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியபடி அன்பே அன்பை வருவிக்கும் தன்மை உடையது. இவ்வுண்மையை நன்கு அறியாத சிலர் உலகிற்கு அருளுடைய கடவுள் ஒருவன் தலைவனாயிருந்தால் நாம் இப்பொழுது உலகிற்காணுகிறபடி மக்களுக்குள் துன்பங்கள் உண்டாகுமா? என்று கேட்கிறார்கள். மக்கள் அறிவுப் பெருக்கம் அடைதற்கு அவர்களுக்குத் தாங்கள் அறிந்த வண்ணம் ஒழுகும் உரிமை கொடுத்த கடவுள் அவர்கள் தங்கள் அறிவை நல்வழியிற் செலுத்தி நன்மை செய்யாது தீவழியிற் செலுத்தித் தீமை செய்வார்களானால் அவர்களைத் தீய

வழியினின்று விலக்கி நல்வழியி லொழுகச் செய்தற்கு அருளி னால் அவர்களுக்கு வேண்டும் அளவில் மாத்திரம் துன்பங் கொடுக்கின்றான். அது பற்றி அவனுடைய அருட்டன்மைக்குச் சிறிதும் இழுக்கு உண்டாகாது.

7. தமிழ் மறைகளில் அந்தணன் என்ற சொல் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்ட சில இடங்களை அடியிலே குறிப்பிடுவோம்.

1. **அந்தணனைத் தொழுவா ரவல மறுப்பாரே**

திருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கொடிமாடச்செங் குன்றூர்ப்பதிகம்.
க-வது பாட்டு.

2. **அரவஞ் சேர்சடை அந்தணன் அணங்கி னொடமரு மிடம்**

திருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கச்சி யேகம்பப் பதிகம்.
கூ-வது பாட்டு.

3. **திருமார்பிற் புரிவெண்ணூ றிகழ்பூண்ட அந்தணனை**

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாவடுதுறைத் திருத்தாண்டகம்.
ய-வது பாட்டு.

4. **அந்தணனே அருளாயடி யேற்கிட்டனங் கெடவே**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுது குன்றப்பதிகம்.
எ-வது பாட்டு.

5. **அந்தணு வெனையஞ்சலென் றருளாயாரெனக்குறவமரர்களேறே**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைப்பதிகம்.
ரு-வது பாட்டு.

6. **அந்தணனாகி யாண்டு கொண்டருளி**

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்—கீர்த்தித்திருவகவல்.
சஉ-வது வரி.

7. **அந்தணராமிவரா ருருறைவதென்றேன்**

கக-வது திருமுறை பொன்வண்ணத் தந்தாதி சகூ-வது பாட்டு.

8. இனிப் பண்டைத் தமிழ் அறிஞர்கள் அந்தணன் என்னும் சொல்லை மும்மலங்கள் நீங்கிக் கடவுள் அருள் விளங்கப் பெற்ற பெரியோர்களைக் குறிக்கவும் வழங்கி வந்தார்கள். அத்தகைய பெரியோர்கள் கடவுளுடன் இரண்டறக் கலந்து அவனுடைய பண்புகளை உடையவர்கள் ஆதலாலும் அவர்கள் கடவுளே என வழிபடப்பாலராம் முறைமையின ராதலாலும் கடவுளைப் போலவே அந்தணர்கள் எனக் கூறப்பட்டனர். திருவள்ளுவ நாயனார் அவர்களைத் திருக்குறட் பாயிரம் 3-வது அதிகாரத்தில் நீத்தார், துறந்தார், பெரியார், நிறைமொழி மாந்தர், அந்தணர் முதலிய பெயர்களாற் கூறுகின்றார். அவர் அந்தணர் என்ற சொல்லுக்கு "எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவார்'' என 10-வது குறளிற் கட்டுரைத் தருளினார். "அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்" என்ற குறளில் அவர் அந்தணர் என்ற சொல்லை நீத்தார் என்ற பொருளிலும் வழங்கியுள்ளார்.



9. தமிழ் நாட்டிற்கு ஆரியர்கள் வந்த காலத்திற்கு முன் பண்டைத் தமிழர் அந்தணர் என்ற சொல்லைத் தங்களுடைய ஆன்மார்த்த வழிபாட்டிற்கும் பரார்த்த வழிபாட்டிற்கும் ஆசிரியரா யிருந்த ஆதிசைவ மறையவரைக் குறிக்க வழங்கி வந்தார்கள். பார்ப்பார் என்ற தமிழ்ச் சொல்லையும் அவர்கள் ஆதிசைவ மறையவரைக் குறிக்க வழங்கி வந்தார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் 'பார்ப்பான்' என்ற சொல்லைக் கடவுளைக் குறிக்கத் திருவாசகம் புணர்ச்சிப்பத்து கo-வது பாட்டில் வழங்கியுள்ளார். திருவள்ளுவ நாயனாரும் 'பார்ப்பான்' என்ற சொல்லைத் திருக்குறளில் ஓரிடத்தில் மாத்திரம் (134-வது குறள்) வழங்கி யிருக்கிறார். ஆனால் மாணிக்கவாசக சுவாமிகளாவது திருவள்ளுவ நாயனாராவது பிராமணன் என்ற வடமொழிச் சொல்லை எங்கும் வழங்கவில்லை. ஆரியர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தபின் அந்தணன் என்ற தமிழ்ச் சொல்லும் பார்ப்பான் என்ற தமிழ்ச் சொல்லும் அவர்களைக் குறிக்கவும் வழங்கப்பட்டு வந்தன. பார்ப்பான் என்ற சொல் ஆரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்ததைத் திருமூல நாயனார் "பெயர் கொண்ட பார்ப்பான்" என்ற திருமந்திரப் பாட்டாற் குறிப்பிடுகின்றார்.

10. மேலே கூறியவாறு அந்தணன் என்ற தமிழ்ச் சொல்

முதலாவது கடவுளையும் பின் கடவுட்டன்மை அடைந்த பெரியோரையும் பின் ஆதிசைவ மறையவரையும் பின் ஆரிய மறையவரையும் குறிக்கத் தமிழ் நாட்டில் வழங்கப்பட்டு வந்தது காண்க.

11. இக்கட்டுரையிற் செய்யப்பட்ட அந்தணன் என்ற சொற்பொருள் ஆராய்ச்சியால் பண்டைத் தமிழ் மக்கள் கடவுளை அருள் உடையவன் என்று கருதி அன்புடன் வழிபட்டு வந்தார்கள் என்பது நன்கு புலனாகும்.

---

# ஆய்ச்சியர் குரவை

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(ஒன்பதாஞ் சிலம்பு ௱௰௯-ம் பக்கத் தொடர்ச்சி)

கோடிப்பாலை யிசையில், குரல் நரம்பாய மாயவன் இக்கூத்தில் முதன்மை கொண்டவனாயினும், இளி நரம்பாய வெள்ளை (முன்னவன்) யன்முன் அடங்கிப் பாடியாடுத லியல்பென்பதைக் குறிக்கவேண்டிப் பகுதி மாத்திரையாக வொலிக்க நேர்ந்தமையும், இளி நரம்பாய வெள்ளையன் தனது நிலைக்குத் தகுதியாக முதன்மை யொலி கொண்டு முழங்க நேர்ந்தமையும், கொண்டவன் வலுக்கொண்ட துத்த நரம்பாய பிஞ்ஞை வலிய வொலி கொண்டு மல்லாட நேர்ந்தமையும், விளரி நரம்பாய இரேவதி முன்னவனாகிய வெள்ளையன் மனைவியாயிருந்தும் இளைய மைத்துனன் மனைவியாகிய பிஞ்ஞையின் முன் விளக்கமுறாமல் நிற்றல் கொண்டு தன்னொலி குறைந்தும் வேற்றொலி விரவியும் வலிமை யில்லாத மந்த சுரமாகப் பாட நேர்ந்தமையும், ருக்மணியும் வாருணியும் தம்மாற்றாள்களின் கொண்டாட்டத்தால் வாயடங்க நேர்ந்தமையும், அசோதை தனது மக்களின் ஆட்டபாட்டமும் மருமக்களின் கொண்டாட்டமுங் கண்டு கொண்ட குதூகலத்தால் மயங்கி நின்றாடுவதும் பொருந்திப் பொலிதல் கண்டு வியக்குங் கவினுடையதாம். இது



கொண்டு, அக்காலப் பெண்மக்கள் யாழிற் கையாள வேண்டிய பண்முறைகளையும், அம்முறைகளை வேளை யறிந்து வழங்கும் நேர்மைகளையும் நன்கறிந்துள்ளமை தெளியலாம்.

இங்ஙனம் நால்வரும் மந்தோச்சமத்துடன் பாட, எழுவரும் அடி பெயர்த்தாடத் தொடங்கினர். அப்பொழுது பாடிய பாட்டானது, அவர்களது ஆட்டத்திற் குகந்த சந்தத்தைக் கொண்டு, இடைக்குலக் கன்னியர் மாயவன்பாற் கொண்ட மட்டிலா வன்பினை வெளிப் படுத்துவதா யிருக்கின்றது. இன்னும், அப்பாட்டு, குரவையாடு மகளிர்க்குக் கண்ணன்பாற் பேரன்பினையும், முல்லையந் தீங்குழலிசையின் சிறப்பினையும் நன்கு புகட்டுகின்றது. கன்று குணிலாக் கனியுதிர்த்த செய்தியும், கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த திருவிளையாடலும், பாம்பு கயிறாக் கடல் கடைந்த பண்பும் மாயவன் லீலா விபூதியைக் குரவை மகளிர் மனங்கொண்டு, கொண்டாட்டத்தில் உற்சாகங் கொள்ளச் செய்கின்றன. தொடக்கத்தில், குழலோசையின் மயங்கி மாயவனை மணக்க விரும்பிய பிஞ்ஞையை நோக்கி, அவள் தோழி கூறிய கூற்றினைப் பாடியது, நாடகத் தலைவனாகிய கண்ணபிரானையும், நாடகத் தலைவியாகிய பிஞ்ஞைப் பிராட்டியையுங் கொண்டாடி வழிபட்டதாகும் போலும். மேலும், அவர்கள், பிஞ்ஞைப் பிராட்டி, யமுனா நதியில் தன் தோழிமார்களோடு புனலாடுகையிற் கண்ணன் புகுந்து நடத்திய விளையாடல்களை விளக்கிப் பாடத் தொடங்கினர். "தொழுனைத் துறைவ னோடாடிய பின்னை, யணிநிறம் பாடுகேம் யாம்," என்ற இளங்கோவடிகள் திருவாய் மொழிக்கு அடியார்க்கு நல்லார் கண்ணளிப்புக் கிட்டாமை, கீழ் வரும் பாடல்களின் கருத்தைத் தெளிவிப்பதிலும், அறுவை யொளித்த வரலாற்றின் போக்கினை யறிவதிலும் இடையூற்றினை யுண்டாக்குகின்றது.

பிஞ்ஞை யென்பாளும், வெள்ளையன் என்பாளும்,

" இறுமென் சாய னுடங்க நுடங்கி
யறுவை யொளித்தான் வடிவென் கோயாம்,"

என்று கண்ணனைப் புகழ்ந்தனர். மாயவன் என்பாளும், இரேவதி யென்பாளும்,

" அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம்,"

என்று பிஞ்ஞையைப் புகழ்ந்து,

" வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்,"

என்று அவளை மீண்டும் வியந்தனர். பிஞ்ஞை யென்பாளும், வெள்ளைய னென்பாளும்,

" நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்,"

என்று மாயவன் செயலைப் போற்றிக் கூறினர். மாயவ னென்பாளும், இரேவதி யென்பாளும்,

" தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தான் முகமென் கோயாம்,"

என்று பாடிப் பிஞ்ஞையின் நாணமுங் காதலு மிகுந்த திருமுகத்தைச் சிறப்பித்தனர். பிஞ்ஞை யென்பாளும், வெள்ளைய னென்பாளும்,

" கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்."

என்று பிஞ்ஞையின் பேரழகிற் கண்ணன் மயங்கி நின்றமையைப் பாடினர். இங்கு, நாடக வியலை யொட்டிய வுரையாடல் சிறுபான்மை தென்படுவதையும், யமுனை நதியிற் கண்ணபிரான் நிகழ்த்திய கோபிகா வஸ்திராபகரணத்தின் ஒரு பகுதி விளக்கப்பட் டுள்ளதையும், இருபுறக் காதலின் தோற்றத்தையும் நன்குணரலாம். இப்பாடல்களும் ஆட்டத்திற் குரிய சந்தவின்பங் கொண்டு திகழ்தல் கண்டு களிக்கற்பாலது. இப்பாடல்கள் உரையாசிரியராற் குரவை மகளிர் கூற்று, எனப் பொதுப்படக் கூறப்பட்டுள்ளனவேனும், பொருண்முடிபுஞ் சந்தர்ப்பமு நோக்கி மேற்கண்டவாறு வகுத்துக் கூறப்பட்டன.

இவ்வித மாடிப் பாடப்பட்ட குரவைக் கூத்தினைக் கண்டு



வியந்த மாதரி தன் மகள் ஐயையையுங் கூட்டி, குரவை மகளிருடன் கூடி யுள்வரிப் பாட்டாகத் திருமாலைப் பாடி வணங்கினாள். அப்பாடல்களுள், பூவை நிலையாகப்பாடிய பாடல்கள் மூன்றில், பாண்டிய மன்னர் சோழ மன்னர் சேரமன்னராகிய மூவரையும் திருமாலோடு பொருத்தி யிணைத்துக் கூறியமை, தமிழ் நாட்டு மூவேந்தர்பால், தமிழ் மக்களுக்கிருந்த பேரன்பினையும், அம் மூவேந்தர் பெருமையினையும் நன்கு விளக்குகின்றது. இன்னும், அது, இக்காலத்திற் கொண்டாடுங் கொண்டாட்ட முடிவில் அரச வாழ்த்துங் கடவுள் வாழ்த்துங் கொண்டு முடிப்பதை அக் காலத்திலுந் தமிழர்கள் கைக்கொண்டிருந்தன ரென்பதைத் தெளிவு படுத்துகின்றது. பாண்டிய மன்னரின் வாழ்த்து முன்னர்க் காணப்படுவது, குடிமக்கள் தமதரசர்களை முதலிற் கொண்டாடுவதில் முனைந்து நிற்றலையும், சேரர்களின் இளங்கோவாகிய அடிகளின் செழுந் தூய்மையினையும் தெளிவுறுத்துகின்றது. இனி, அவர்கள் முன்னிலைப் பரவலாகக் கண்ணனைக் கொண்டாடியதும், படர்க்கைப் பரவலாகத் திருமாலைப் பணிந்து வழுத்தியதும் ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களையும் பின்னடையச் செய்யும் பெற்றியனவாம். பாற்கடலைக் கடைந்த கைகள் ஆய்ச்சியர் கடைகயிற்றாற் கட்டுண்ணலும், உலகடையவுண்ட வாய் உறி வெண்ணெயினை யுண்ணலும், மூவுலகையுமளந்த வடிகள் பஞ்சவர்க்குத் தூதாக நடத்தலும் கண்ணபிரான் பெருமையினையும், அவன் அன்பர்களிடத்திற் கட்டுண்டு கிடத்தலையும் வெளிப் படுத்துகின்றன. படர்க்கைப் பரவலின் கண், "ஐம்பொறிகளுள் முதன்மை கொண்டனவாய செவி, கண், வாய் மூன்றும் முறையே திருமால் சீர் கேளாதும், கரியவனைக் காணாதும், நாராயணா வென்னாதும் வீணே நடக்குமாயின், பயனிலவாம்," எனவுரைத்த பண்பு ஆய்ச்சியர் கண்ணன்பாற் கொண்ட கழிபேரன்பையும், இளங்கோவடிகளின் துறவுத் தூய்மையையும் தெள்ளி தாக்குகின்றது.

நிற்க, நற்குறி தீக்குறிகளாகிய சகுனம் பார்க்கும் முறையை யாய்வோம். இம்முறையில் நம்பிக்கை யுள்ளார்க்குப் பயனுறுதலும், நம்பிக்கை யில்லார்க்குப் பயனின்மையுமா மென்பது

பெரும்பாலார் கொள்கை. அக் கொள்கையின்படியே ஆய்ச்சியர் குரவையில் மாதரி கண்ட தீக்குறிகள் கோவலனுக்கு நேரிட்ட தீங்கின் முற்குறிகளாயின. ஆயினும், கோவலன் சிலம்பினை விற்க வெளிப்பட்டு, இடைக்குலமன்றித் தன் குலமறியுந் தகுதி யன்றாகலின், தன்னையிமிலேற்றுன் றெதிர்ந்ததை யிழுக்கென வறியானுய்ச் செல்லத் தீங்கு பயந்த செய்தி யொன்று சிலப்பதிகாரத்திற் காணப்படுகின்றது. இங்கே கோவலன் வணிகனுயினும், இடைச்சேரியிலுள்ள இடையர் மனையில் வாழ்ந்து, இடையர் தெருவே செல்வதால், கொல்லேறெதிர்ந் தமையைத் தன்குலமறியுந் தகுதியுடைய சகுனமாகக் கொள்ள வேண்டியது போலும். மேலும், சகுனங்கள், ஒவ்வொரு குலத்திற்கும் இடத்திற்கும் தகுதியாக அக்காலத்திற் பிரிக்கப் பட்டிருந்தன போலும். அப்பிரிவுகள் பெரும்பாலும் இடவமைப்புக்களைக் கருத்திடைக் கொண்டனவாம். கோவலன் தன்னைக் கொல்லேறெதிர்ந்தமை தன்குலமறியாச் சகுனமாகக் கருதி விலக்கினும், தன்னையறியாது தன் மனச்சாட்சியில் அச்சகுனம் புகுந்து அவனை வருத்தி யுள்ளத்தைக் குழப்பி நம்புதலை யுண்டாக்கி யிருக்கக் கூடுமாகையால், அச்சகுனம் அவனுக்குத் தீங்கு பயக்கலாயிற்று போலும். ஆகலின், சகுனம் நம்புதலைக் கொண்டவர்க்குத் தன் பயனைத் தவறாது கொடுக்குங் கொள்கைத்தெனப் புலனுகின்றது. இடைக்குலக் கன்னியர் கொல்லேறு தழுவிய இடைக்குலக் குமரர்களை மணக்க விரும்புவது, அவர்கள் வீரவாழ்க்கையிற் கொண்ட விருப்பினையும், தமது கணவர்களிடத்தில் இவ்வுலக வாழ்வுக் கிடையூறுங் குணங் காணுக் கொள்கையினையும், தமது குலத்தொழிலிற் சிறந்த தேர்ச்சியினையும் வேண்டியேயாம்.

இதுவரை கண்ட ஆராய்ச்சியாற் சிலப்பதிகாரத்தின் நாப்பண் விளங்கும். இவ்வாய்ச்சியர் குரவையில் மேற்கண்டவாறே பல நற்பொருள்களையும், பழங்கால பழக்க வழக்கங்களையும், யாழின் போக்குகளையும், ஆய்ச்சிய ரியல்புகளையும், திருமாலின் சிறப்புகளையும் சகுனத்தின் பண்புகளையும் நாம் தெளிவாகக் காணலாம். பழந்தமிழ் நூல்களிற் புதைபட்டுக் கிடக்கு மிது போன்ற பொருள்கள் இன்னு மெவ்வளவோ?

---



## தமிழ்த் திருவாளர்

# மணி. திருநாவுக்கரசு முதலியார்

(ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது)



நமது பொதுநிலைக் கழக முதன் மாணவரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் ஆசிரியருமான மணி. திருநாவுக்கரசு முதலியார் நிகழும் வைகாசி ௧௦-ஆம் நாள் சனிக்கிழமை (23-5-1931) முற்பகலில் திடீரென இம்மண்ணுலக வாழ்வுநீத்து விண்ணுலகு புகுந்த செய்தி, இத்தமிழ் நாட்டவர் எல்லாரையும் திடுக்கிடச் செய்து, அவர்க்குப் பெருந்துயரைத் தருவதொன்றாய் எங்கும் பரவலாயிற்று. முகிழ்த்து மணங் கமழ்ந்து அழகாய் மலரும் பருவத்தே ஓர் அரிய செங்கழுநீர்ப் பூ அதனருமை யறியான் ஒருவனுற் கிள்ளி யெறியப்பட்டு அழிந்தாற்போலவும், மறை நிலாக் காலத்தே திணிந்து பரந்த இருளின்கட் செல்லும் நெறி இதுவெனக் காட்டுதற்கு ஏற்றி வைத்த ஒரு பேரொளி விளக்குச் சடுதியில் வீசிய சூறைக்காற்றினுல் அவிந்து மறைந்தாற்போலவும், நீண்ட நாள் வறுமையால் வருந்திய ஒருவன் புதையலாய்க் கண்டெடுத்த பொன் நிறைந்த குடம் ஒன்று வன்னெஞ்சக் கள்வ னெருவனுற் கவர்ந்துகொள்ளப்பட்டாற்போலவும், இத்தமிழ் நாட்டுக்கு ஒரு கல்வி மலராய், ஓர் அறிவு விளக்

காய், ஓர் அருங்குணப் புதையலாய்த் தோன்றிய இவ்விளைஞர் தமது ௪௩-ஆம் ஆண்டில் கதுமெனக் கூற்றுவனாற் கவரப்பட்டது ஒருபெருங்கொடுமை யன்றோ! இச்சென்னைமா நகரின் வட பகுதிக்கு மணி. திருநாவுக்கரசு முதலியாரும், இதன் தென் பகுதிக்குத் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் இருபெருங் கண்களாய்த் திகழாநின்றனர்; அவற்றுள் ஒரு கண்ணை இழந்து இப்போதிது துயர் கூர்ந்து நிற்கலாயிற்றே! ஞாயிறு திங்கள் என்னும் இரண்டில் ஒன்று அழிந்து மறைந்தால் திரும்பவும் அதனையொப்ப தொன்றனைப் பெறுதல் இயலுமோ? அது போலவே, இவ்வருமைத் தமிழ் மகனாரை யொப்பார் ஓர் இளைஞரைத் திரும்பவும் யாம் பெறக்கிடைப்பது அரிதரிது!

இவர் 1888-ஆம் ஆண்டு இவர்தம் பெற்றோர் ஆற்றிய தவத்தின் பயனாய்ச், செங்கற்பட்டு மாகாணத்தில் உள்ள மணிமங்கலம் என்னும் ஊரிற் பிறந்தார். இவருடன் பிறந்தாரில் இவர்தம் தம்பியரான திருஞானசம்பந்த முதலியாருங் கோடீசுவர முதலியாருங் கல்வியிலுந் தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கு உழைப்பதிலுஞ் சிறந்து திகழ்கின்றார்கள். பின்னவரான கோடீசுவரர் பி. ஏ., எல். டி. என்னும் ஆங்கிலப் பட்டமும் பெற்றுக் கோவிந்தப்ப நாயகர் கல்விச் சாலைக்குத் தலைமையாசிரியராகவும் அமர்ந்திருக்கின்றார்.

தமது பிள்ளைமைப் பருவத்தே திருநாவுக்கரசு தம் தந்தையாரால் தமிழ் நூல்கள் கற்பிக்கப்பட்டு வந்ததுடன், ஆங்கிலக் கல்விச் சாலைகளிலுஞ் சேர்ந்து ஆங்கிலமுங் கற்று வந்தார். அக்காலங்களில் இவருக்குக் கல்வி பயிற்றிவந்த ஆசிரியர்களெல்லாரும் இவரது நுட்ப அறிவின் திறனையுங் கல்வி கற்பதில் இவர்க்குள்ள வேட்கையினையுங் கண்டு பெரிது வியந்து இவரைப் பாராட்டி வந்தார்கள் எனவும், தமிழ் ஆங்கிலப் பாடங்கள் எல்லாவற்றிலும் இவர் தம்முடன் பயின்ற உடன் மாணாக்கர் எல்லாரையும்விடத் திறமை மிக்கவராயிருந்தனரெனவுங் கேள்வியுறுகின்றோம். ஆங்கிலக்கல்லூரியில் தொடர்பாகக் கலைபயின்று பட்டம் பெறுதற்குத் தக்க செல்வ வளம் இன்றி, இவர் சிறு பருவத்திலேயே வறுமைப் பட்டமையாற் பத்தாவது வகுப்புவரையிற் பயின்று, அதன்பின் கல்லூரிப் பயிற்சியை விட்டு நீங்கினார்.



அங்ஙனம் ஆங்கிலப் பயிற்சியை விட நேர்ந்தாலும், தமிழ் நூல் கற்பதில் தமக்குள்ள அவா சிறிதும் நீங்காமல் வரவர வளர்ந்து வந்தமையால், இவர் சென்னையில் திரு. கலியாணசுந்தர அடிகளைச் சார்ந்து தமிழ் நூல்கள் கற்று வந்தார்.

பின்னர் இன்றைக்குச் சிறிதேறக்குறைய 23-ஆண்டுகளுக்கு முன், எம்மாணவர் நாகை. கோபாலகிருஷ்ணன் வாயிலாகத் திருநாவுக்கரசு எம்மை வந்து அடுத்தனர். அப்போது யாம் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தமையாற், சென்னையிலேயே குடியிருப்புக் கொண்டிருந்தேம். கோபாலகிருஷ்ணனுந் தாமுமாகச் சில நாட்கள் இவர் எம்மை வந்து கண்டுவருகையில், தமிழிலுள்ள பழைய செந்தமிழ் நூல்களை எம்பால் முறையாகக் கற்க வேண்டுமென்னுந் தமது விருப்பத்தைக் கோபாலகிருஷ்ணன் வாயிலாக எமக்கு மெல்லெனப் புலப்படுத்தினார். அது தெரிந்து யாம் "ஆங்கிலங் கற்கின்ற மாணவர் தமிழ் நூல்களை மிகுதியுங் கற்பாராயின், தமிழ் நூற்சுவை ஆங்கில நூற்பயிற்சியைத் தடைசெய்யும்; ஆதலால், ஆங்கிலத்தை மிகுதியாகவுந் தமிழைச் சிறிதாகவும் பயின்று, ஆங்கிலப் புலமையை முற்றுவித்துக்கொண்டபின் தமிழை மிகக் கற்றலே வேண்டற்பாலது," என்றேம். அதன்மேல், இவர் ஆங்கிலம் நீளப்பயிலுதற்கு ஏற்ற வசதிகள் பயவாத தமது வறிய நிலைமையினையும், தமிழ் கற்றலது அறிவு பெறவேண்டுமெனத் தமக்குள் அடங்காது எழும் அவாவினையும் எமக்குத் தெரிவித்தனர். இவர் அவைகளைத் தெரிவித்த முறையானது, எமது நெஞ்சத்தை இளகச் செய்து, அப்போதே இவர்பால் எமக்கு மிக்க அன்பினைத் தோற்றுவித்தது. இவர் வேண்டுகோளுக்கும் இசையலானேம். அது முதல் இவருங் கோபாலகிருஷ்ணனும் ஒருங்கு சேர்ந்து, 'திருமுருகாற்றுப்படை'யும் 'நன்னூலும்' துவங்கி அவையும் பிறவும் ஒழுங்காக எம்பாற் பாடங் கேட்டு வரலாயினர்.

இருவரும் நுண்ணுணர்வுடையராகக் காணப்படினும், கோபாலகிருஷ்ணனுக்கு எழுதும் ஆற்றலே மிகுதியாயுளதென்பதும், திருநாவுக்கரசுக்கு எழுதும் ஆற்றலொடு பேசும் ஆற்றலும் ஒப்ப உளதென்பதும், அப்போதே புலப்படலாயின. இவ்விருவர்க்கும் உள்ள அவ்வேற்றியல்பு, இவர்கள் வளர்ந்து பெரியரானபின்றான் வெள்ளிடைமலைபோல விளங்கலாயிற்று. கோபாலகிருஷ்ணன் பொருள் பொதிந்த இனிய செந்தமிழ்க் கட்டுரைகள் எழுதுவதிலும், புதிய கதைகள் அமைப்பதிலும் மிக்கு விளங்கினர்; ஆனால், அவைக்களங்களிற் கேட்போர் கருத்தை இழுக்கத்தக்க சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல் அவர்க்கு வாய்த்திலது. மற்றுத் திருநாவுக்கரசுக்கோ, கட்டிளமைக் காலத்தே கட்டுரைகள் கதைநூல்கள் எழுதுவதிற் கருத்துச் சென்றிலதாயினும், அவைகளிற் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் இவர்தம் அறிவும் ஆற்றலும் ஈடுபட்டிருந்தன. அக்காலத்திலேயே இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டவர், இவரை மிகவும் கொண்டாடிப் பேசினர். ஒரு பொருளை எடுத்து விரித்துப் பேசுங்காற், கேட்பவரது கருத்து மகிழ்ந்து அதிற் பதியுமாறு நகைச் சுவை தோன்றப் பேசுந் திறம் இவர்க்கு வாய்ந்தாற்போற் பிறர்க்கு வாய்ப்பது அரிது. நகைச்சுவை மட்டுந் தோன்றப் பேசுவார் பலர் உளர்; ஆனால், அவரது உரையில் அறிந்து நினைவுகூரத் தக்க அரும்பொருள்கள் அமையா. மற்றுத் திருநாவுக்கரசு நிகழ்த்தும் உரையிலோ, நகைச் சுவையோடு பொருட் சுவையும் அமைந்திருந்தது. இன்னும், நகைச் சுவை யில்லாமல், உயர்ந்த துறைகளைப் பற்றிப் பேசுங்காலுங், கேட்பார்க்குச் சலிப்பும் உவர்ப்பும் தோன்றாமல் அவர்களது கருத்தை அவற்றின்பாற் பதியவைக்கும் முறையில் அவை தம்மை அழகு படுத்திப் பேசும் வல்லமையும் இவர்க்கிருந்தது. இங்ஙனம் "எண்பொருளவாகச் செலச் சொல்லுஞ்" சொல்வன்மை இவரது இளம்பருவம் முதல் இவர் இறந்துபடுங் காலம் வரையிற் குன்றாதிருந்தது.

இங்ஙனஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வகையில் இவர் தமக்கிருந்த அறிவாற்றலைச் சிறுபருவ முதலே நூலெழுதுந் துறையில் செலுத்தி யிருந்தனராயிற், சைவத்திற்குந் தமிழுக்கும் நிலையான பயனைத் தரத்தக்க பல அருந்தமிழ் நூல்களை இவர் இயற்றியிருக்கலாம். அதைப் பற்றி இவர்க்கு யாம் பலகால் வற்புறுத்திச் சொல்லியும், அதில் இவர்க்குக் கருத்துச் செல்லவில்லை. சிறு பருவத்தில் இவருக்கிருந்த வறுமையானது புராணப் பிரசங்கஞ் செய்யும்படி இவரைத் தூண்டியது. அதனால் வந்த வருவாய் இவரது இளம்பருவ வாழ்க்கைக்கு உதவி செய்தது.

பின்னர் இவர் கல்விச் சாலைகளில் தமிழாசிரியராய் அமர்ந்து, தமது வாழ்க்கையை இயன்ற வரையில் வறுமை யின்றிச் செலுத்திக்கொள்ள வாய்த்தது முதற்றான், கட்டுரைகள் எழுதும் பழக்கத்தையுங் கைக்கொள்ளலானார். தமது குடும்பச் சுமை முற்றும் இவரே தாங்கவேண்டி யிருந்தமையானும், அச் சுமையை எளிதாக்குதற் கேற்ற செல்வ வளம் இல்லாமையானுங் குடும்ப வாழ்க்கையை இனிதாக்குதற்கு வேண்டும் பொருள் வருவாயை நோக்கியே, இவர் திங்கள் இதழ் கிழமை இதழ் நாளிதழ்கட்குக் கட்டுரை யெழுதவும் பள்ளிக்கூடங்கட்குப் பாடப் புத்தகங்கள் இயற்றவும் வேண்டியவரானார். பொருள் வருவாயை நோக்கி எழுதப்படும் எதுவும் பெரும்பாலும் நிலையான பயனைத் தரத்தக்கதாகாது. இதனை நமது தமிழ் நாட்டுச் செல்வர்கள் உணர்ந்து பார்த்து, நூல் எழுதும் ஆற்றல் வாய்ந்த தமிழறிஞர்க்கு வறுமை தீரப் பொருளுதவி செய்திருப்பார்களாயின், இதுகாறும் எத்தனையோ அருந்தமிழ் நூல்கள் பேரறிஞர்களால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கும். ஆனால், அச் செல்வர்கள் தமது பெரும்பொருளைப் பயனற்ற தீவினையைப் பெருக்கத் தக்க ஆரவாரமான வழிகளிற் பாழாக்குகின்றனரே யன்றித், தமிழ் மொழியை வளம்படுத்தி வளர்க்குந் துறைகளிற் சிறிதும் பயன்படுத்துகின்றிலர்! மேல் நாட்டவரிற் கற்றவர் தொகையும், அக் கற்றவரால் அரும்பெரும் பொருள் பொதிந்து இயற்றி வெளியிடப்படும் நூல்களின் தொகையும் நாடோறும் பதினாயிரக் கணக்காய்ப் பெருகி வருதலையும், தமிழ் நாட்டவரின் நன்கு கற்ற மிகச் சிலரின் தொகையும் வறுமையால் நாளுக்கு நாள்

அருகி வருதலையும் ஒப்பிட்டு எண்ணிப் பார்க்குங்கால், இத்தமிழ் நாட்டவர் எந்த வகையில் முன்னேற்றம் அடையப் போகின்றார்கள் என்னுந் திகில் பெரிதா யிருக்கின்றது; நகைக்குந் துணிக்கும் வீணை வெளிமினுக்குகளுக்கும் வெற்றாரவாரங்களுக்கும் இத்தமிழ் நாட்டிற் கணக்கின்றிச் செலவாகும் பொருளையுங், கல்விக்குங் கைத்தொழிலுக்கும் புதிய புதிய ஆராய்ச்சிகளுக்குஞ் சமய அறிவு வளர்ச்சிக்கும் மேனாட்டிற் பயன் படுத்தப்படும் அளவற்ற பொருளையும் ஒப்பிட்டு எண்ணிப் பார்க்குங்கால், இந்நாட்டவர் மேல்நாட்டவரோ டொப்ப நாகரிக இன்ப அறிவு வாழ்க்கையைப் பெறுதல் கனவிலுங் கைகூடுமோ என்று வருந்தி ஏங்க வேண்டியதா யிருக்கின்றது! இந்நாட்டில் வீணாகச் செலவழியும் பெரும்பொருட்டிரள் நூறு கோடியில் ஒரு சிறு பங்காயினுந் தமிழ் கற்றார்க்குப் பயன் படுமாறு வைக்கப்படுமானால், நம் திருநாவுக்கரசை யொத்த எத்தனையோ தமிழ்ப் புதல்வர்கள் தமிழறிவிற் சிறந்து, எத்தனையோ அரும்பெருந் தமிழ் நூல்களை இயற்றி வெளியிட்டிருப்பார்கள்! திருநாவுக்கரசும் இவரைப்போன்ற வேறு சிலரும் அரிய பெரிய தமிழ் நூல்கள் எழுதாமைக்குக் காரணம், அவரது வாழ்க்கை இனிது நடத்தற்குப் போதுமான பொருள் வருவாய் இல்லாமையே யன்றோ? ஐயகோ! தமிழறிஞர்க்குள்ள வறுமை என்றொன்று எங்ஙனம் நீங்கப் போகின்றது! நம் அருமைக் கண்மணிகளாம் தமிழிளைஞர் சிலரையும் நாம் இங்ஙனம் விரைவில் இழக்க நேர்வது பெரும்பாலும் அவர்க்குள்ள குடும்பக் கவலையினாலன்றோ? இது நிற்க.

இனி இவருடைய அறிவு ஆராய்ச்சி நல்லியல்புகளைப் பற்றிச் சிறிது கூறல் வேண்டும்: இவர் இயற்கையிலேயே கூர்த்த அறிவுடையவர்; தாம் ஒன்று கற்றாற் பின்னர் அதனை நூறாகப் பெருக்கி விடுவர்; அதனைப் பிறர்க்கு விளக்கிச் சொல்லுதலிலும் வல்லர்; அங்ஙனம் விளக்குதற்கு வேண்டிய பலவற்றைப் பல துறைகளிலிருந்தும் புதியவாக எடுத்துச் சேர்த்துக்கொள்வர். குடும்பச் சுமையும் மிகுதியான செலவும் இவற்றின் பொருட்டு ஓயாமற் பொருளீட்டும் முயற்சியும் இல்லாதிருந்



தால், உணவை ஒழுங்குபடுத்தி நோய்க்கு இடமானவைகளை விலக்கித் தமதறிவையும் முயற்சியையும் ஒருமுகப்படுத்தி யிருந்தால், தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள இன்னும் எத்தனையோ அரும்பெரு நூல்களை யெல்லாம் ஆழமாகப் பயின்று, அப்பயிற்சியாலாய பெரும் பயனை இவர் இத்தமிழுலகுக்குத் தந்திருக்கலாம். ஆழ்ந்தகன்ற நூல்களைப் பயின்று அவற்றின் பொருள்களைப் பயன்படுத்தத்தக்க அத்துணைச் சிறந்த இயற்கையறிவு இவர்க்கு அமைந்திருந்தது. ஆனால், அது பயன்றராமல் இத்துணை விரைவில் மறைந்து போயிற்றே!

இவர் எம்பாற் கல்வி பயின்று வெளியேறிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்ற காலையில், இவரது அறிவானது ஆராய்ச்சி முறையிற் சென்று, தாம் கற்றவற்றிற் பொருந்துவன இவை, பொருந்தாதன இவை எனக் காணும் நீர்மையதா யிருக்கவில்லை. தம் முன்னாசிரியராகிய கலியாணசுந்தர அடிகள் கொண்டிருந்த ஆரியப் பற்றிலேயே இவர்க்குப் பிடிமானம் மிகுதியா யிருந்தது. எம்முடைய ஆராய்ச்சித் துறைகளிலும், யாம் ஆராய்ந்து கட்டிய முடிபுகளிலும் நீண்ட காலம் வரையிற் பிடிமானம் இல்லாமலே இருந்தார். ஆசிரியர் மெய்கண்ட தேவர் அருளிச் செய்த 'சிவஞான போதம்' தமிழ் முதல்நூலேயன்றி வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துச் செய்ததன்று என யாம் ஆராய்ந்துரைத்த முடிபைத் தழுவாமல், அது மொழிபெயர்ப்பு நூலே யென்று எழுதியும் பேசியும் வந்தார். எழுதும்போதும் பேசும்போதுந் தமிழ் மொழியைப் பிறசொல் கலப்பின்றித் தனித் தூய தமிழாகவே வழங்க வேண்டுமென்று யாம் வற்புறுத்தி வருங் கொள்கையில் நீண்ட காலம் வரையில் உடம்பாடில்லாமலே யிருந்தார். 'வேதம்' என்றும் 'ஆகமம்' என்றும் வடமொழியில் வழங்கும் நூல்கள் இறைவன் அருளிச் செய்தன வல்ல என்று யாம் ஆராய்ந்துரைத்த முடிபிற் கருத்தொருப்பா டில்லாமலே யிருந்தார். இன்னும் இங்ஙனமே நூலாராய்ச்சித் துறைகளிலுஞ் சீர்திருத்த முறைகளிலும் யாம் ஆராய்ந்து கொண்ட கோட்பாடுகளில் இவர் உடன்பாடுடையராய் நில்லாமற் றம் முன்னாசிரியராகிய கலியாண சுந்தர அடிகள் சென்ற வழியே சென்றார்.

என்றாலும், இவர் எம்மிடத்து வைத்த பேரன்பிலும் பெரும் பாராட்டிலுஞ் சிறிதும் பிறழ்ந்தவர் அல்லர். அதனால் எமக்கும் இவர்பாலுள்ள அன்பு சிறிதும் பிறழ்ந்திலது. கருத்து வேறுபாடு பற்றி அன்பு சிதையாமலும் பகைமை கொள்ளாமலும் எம்மோடு என்றும் ஒரு நீர்மையராய் ஒழுகிய இவரது சிறந்த உள்ள மேம்பாடானது, கருத்து வேற்றுமை குறித்து அன்பின்றி ஒருவரை யொருவர் பகைக்குந் தமிழ்ப் புலவர்க்கும் பிறர்க்கும் அறிவு தெருட்டும் அருமணி விளக்கமாய் நிற்கற்பாலது.

யாம் சென்ற ஆராய்ச்சித் துறையிலுஞ் சீர்திருத்த முறையிலும் இவர் முன்னமே எம்மோடு ஒத்து நின்று உதவி புரிந்திருந்தனராயின், இத்தமிழ் நாட்டில் இன்னும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும். எம் சைவ சமயாசிரியர் தமிழாசிரியர் செய்து வைத்த சீர்திருத்தங்களையே யாம் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னமேதொட்டு எம்முடைய நூல்களாலும் எம்முடைய விரிவுரைகளாலும் ஆங்காங்கு விளக்கி வருகின்றேம். இற்றைக்கு மூன்றாண்டுகளுக்கு முன் புதிது தோன்றிய சீர்திருத்தக்காரரது இயக்கமானது எம்முடைய கோட்பாடுகளையே தழுவி யெழுந்ததாயினும், இடைக்காலத்தே எம் சைவ ஆசிரியர்க்கு மாறாய்த் திரும்பிச் சைவ சித்தாந்தத்துக்கு உடம்பாடாகாத "பௌராணிக சைவர்" தம் பொருந்தாக் கூற்றுகளை எடுத்துக்கொண்டு சிவபிரானையுஞ் சிவனடியார்களையுந் தமக்குத் தோன்றியவாறெல்லாம் இழித்துப் பேசுவதாயிற்று. அவ்வாறு சைவ சித்தாந்தத்தின்மேல் ஏற்றப்பட்ட பழிகளைக் களைந்து, சைவ சித்தாந்த உண்மையினை நாட்டி, அப்புதிய இயக்கத்தாருடன் யாம் போராடிய காலத்தும் யாம் தனி நின்றே அதனைச் செய்யு நிலையிலிருந்தேம். புதிய இயக்கத்தார் நிகழ்த்துந் தடைகட்கு விடை கூறமாட்டாத பௌராணிக சைவர் அவரை யெதிர்ப்பது விடுத்துச் சைவ சித்தாந்த உண்மையினை நாட்டும் எம்மையே எதிர்க்கலாயினர். ஒரு பக்கத்திற் புதிய இயக்கத்தாரும் மற்றொரு பக்கத்திற் பௌராணிக சைவருந் தாக்க, அந்நேரத்தில் யாம் சிவபிரான் றுணையொன்றே கொண்டு, அவ்விருவர்க்கும் ஈடு கொடுத்துச் சைவ சித்தாந்த உண்மையினைத் தனி



நின்றே நாட்டும் நிலையினம் ஆனேம். அந்நேரத்தில் நம் அருமைத் திருநாவுக்கரசு நம்முடன் சேர்ந்து நின்று சமயத் தொண்டு செய்திருந்தனராயின் இன்னும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும்.

ஆனாலும், அப்போராட்டந் துவங்கிய இரண்டோராண்டுக்குப்பிற் சடுதியில் திருநாவுக்கரசின்பாற் றோன்றிய ஒரு முழுமாறுதலானது எமக்குப் பெரு வியப்பினையும் பெரு மகிழ்ச்சியினையும் பயந்தது. பாழ்ங் கொள்கையையே விடாப்பிடியாய்க் கொண்ட புதிய இயக்கமும் அவர்க்குப் பழுதாகத் தோன்றலாயிற்று; முழுமுதற் கடவுளான எல்லாம் வல்ல சிவத்தினிலக்கணத்துக்கும், அதனை அறிவுறுத்துஞ் சைவ சித்தாந்தத்துக்கும், அதனைத் தனக்கேயுடைய தெய்வத் தமிழுக்குஞ், சைவ ஆசிரியர் மேற்கொண்ட சீர்திருத்தத் துறைகட்கும் முற்றும் முரணான பௌராணிக சைவக் கோட்பாடும் அவர்க்குப் பழுதாகத் தோன்றலாயிற்று. இங்ஙனந் தோன்றிய பின்னர்த்தான் ஆராய்ச்சி முறையிற் செல்லும் எமது தமிழ்த் தொண்டு சிவத் தொண்டு சிறந்தனவாகுமெனத் திருநாவுக்கரசு நன்கறிந்து, அதுமுதல் எம்முடைய கோட்பாடுகளையே முற்றுந் தழுவி நடக்கக் கங்கணங் கட்டினார். எமது திருத்தொண்டினால் இத்தமிழகத்துக்கு விளையும் நலங்களைப் பகுத்துணர்ந்து பாராமையாற் பௌராணிக சைவரிற் பலர் எம்மைப் புறங்கூறுவாராய்ச் சிறிதுந் திருந்தாதிருக்க, நம் அருமைத் திருநாவுக்கரசு உடனே எம் வழிக்குத் திரும்பிப், பழமையை யொட்டிய சீர்திருத்தத் துறையில் இறங்கியது பெரிதும் பாராட்டற்பால தொன்றா யிருந்தது. சென்ற தைத் திங்கள் பூச நாளன்று பல்லாவரத்திற் கூடிய எமது பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு விழாப் பேரவைக்குத், திருநாவுக்கரசு பல வகையில் உதவி செய்ததுடன், பௌராணிக சைவர் பெரிதும் வெருக்கொளத்தக்க மிக உயர்ந்த சீர்திருத்தங்களையும் அஞ்சா ஆண்மையுடன் கொணர்ந்து, எமதும் அவையாரதும் முழு உடன்பாடு பெற்று அவைதம்மை நன்கு நிறைவேற்றி வைத்தார். இவர் இத்துணை அஞ்சா ஆண்மையினை

ராய்த் தமிழ் மக்கள் ஆக்கத்தைக் கோரி உழைக்க முன் வந்தானது எமக்கு அடங்கா மகிழ்ச்சியினை விளைவித்தது. ஆனாலும், இவர் தமது உணவினை ஒழுங்கு படுத்தாமலும், உடலோம்புந் தவவொழுக்க முறைகளைக் கைக்கொள்ளாமலும் இத்துணை விரைவில் தமதுடம்பை நீத்து ஏகியது நினைக்குந் தோறும் பெருந்துயரத்தைத் தருகின்றதே! ஆ! ஊழ்வினையின் வலிவை என்னென்பேம்!

இனி, இவர்தம் நல்லியல்புகளைப் பற்றிச் சிறிது கூறல் வேண்டும்: எவருந் தாம் நல்ல தொன்று செய்தால் அதனை எங்கும் பறையறைந்தாலென வெளிப்படுத்துவர்; நல்லதல்லாதது செய்தால் அதனைத் தமக்குற்றார்க்குந் தெரிவியார். மற்றுத் திருநாவுக்கரசோ தாம் செய்த நன்மையைத் தெரிவியார்; தாம் நல்லதல்லாதது ஏதேனுஞ் செய்திருந்தால் எம்மிடம் அதனைத் தெரிவியாதிரார். பிறர்க்குத் துன்பத்தை விளைவிக்கத் தக்க பொய் இவர் வாயில் வருவதில்லை. மனநலன் நன்கு வாய்ந்தாரை யன்றி, ஏனையோரை இவர் ஒரு பொருட்படுத்தார். வெளிமினுக்கும் பட்ட ஆரவாரங்களும் இவரை மருட்ட மாட்டாவாயின.

மிக இளைஞராயிருந்த காலந் தொட்டே இவர் எம் அறிவுரைகளைப் பெரும்பாலும் ஏற்று ஒழுகும் இயல்பினரா யிருந்தார். நெடுங்காலத்திற்கு முன் ஒருகால் இவர் ஆரவாரமான பட்டங்கள் சூட்டிக் கொள்வதில் அவாவுடையராய், அவ்வாறு தாம் புனைந்துகொண்ட பட்டங்கள் பதித்த தாள் ஒன்றை எம்பாற் கொணர்ந்து காட்டினார். அது கண்டு யாம், "நம் மக்கள் முன்னேற்றத்திற்குஞ் சிவபிரான் றிருவடிக்கும் நாம் இயற்றுந் தொண்டு அவ்வுண்மையே நோக்கியதாய் இருக்க வேண்டுமே யல்லாமல், ஆரவாரமான பட்டங்கள் சூட்டிக்கொள்வதற்கென்று நடைபெறல் ஆகாது. வேண்டுமாயின் நீ தமிழாசிரியராய் வேலை பார்க்கும் நிலையைச் சுட்டிப் 'பண்டிதர்' 'தமிழாசிரியர்,' என்பவைகளை மட்டும் நின்பெயரோடு சேர்த்து வழங்கலாம்" என்றேம். அது முதல் இவர் வெளி யாரவாரமான பட்டங்கள் புனைந்துகொள்வதை அறவே விடுத்தார்.



பின்னும், இவர் இளைஞரா யிருந்தபோது தமிழிற் பாட்டுகள் கட்டுவதில் மிக்க சுருசுருப் புடையரா யிருந்தார். ஒருகால் யாம் இவரை நோக்கி "நமது தமிழ் மொழியிற் கோடிக்கணக்கான பாட்டுகள் பாடப்பட் டிருக்கின்றன. ஆனால், உரை நூல்களோ சிலவும் இல்லை. பொது மக்கட்கு இனி உரை நூல்களே வேண்டும். ஆதலால் நீ பாட்டுப் பாடுவதை விடுத்து உரை எழுதுவதிலேயே பழகல் வேண்டும்" என்றேம். அது முதல் இவர் பாட்டுப் பாடுதலை விடுத்து, உரை எழுதுதலில் திரும்பினார். இங்ஙனமே இவர் தமது இளமைக் காலத்தே எம் அறிவுரைகளைக் கேட்டு அவற்றின்படி நடந்த வகைகள் பல. ஆசிரியர் கூறும் அறிவுரையை ஏற்று நடவாத இஞ்ஞான்றை மாணவர்க்குத், திருநாவுக்கரசின் அரிய நடை நல் விளக்காக ஒளிரற்பாலது.

இனி இவர் தம் கருத்துக்கு மாறானவரிடத்தும் பகைமையின்றி அன்பினால் அளவளாவும் இயல்பினரென்பதை முன்னரே எடுத்துச் சொன்னேம். இவ்வருங் குணம் எல்லார்க்கும் வாய்ப்பதன்று. கல்வியறிவு வாய்ந்த நம்மனோர் எல்லாரும் இந்நல்லியல்பின் விழுப்பத்தை நன்குணர்ந்து என்றைக்கு அதனை யுடையராய் ஒழுகத் தலைப்படுகின்றனரோ அன்று முதற்றான் நம் நாடு செழிப்புறும். நம் அருமைத் திருநாவுக்கரசின் இந்நல்லியல்பும் நம் தமிழறிஞர்க்கும் பிறர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாக நிற்கற்பாலதாகும்.

இனி, இவர் தமது சிற்றிளமைப் பருவந் தொட்டே தமது வருத்தத்தையும் பாராமற் பிறர்க்குதவி செய்யும் இரக்க நெஞ்சமும் நல்லெண்ணமும் உடையர். இவர் எம்பாற் கல்வி பயின்றுகொண்டிருந்த அந்நாளில் ஒருபோது எம் மூத்த மகள் மிகக் கொடிய காய்ச்சலாற் பற்றப்பட்டு உணர்விழந்து கிடந்தாள். யாங்கள் எல்லோமும் பெருந்திகிலும் பெருங்கவலையுங் கொண்டு அம்மகளுக்கு வந்த அந்நோய் தீர்க்கத் தக்க மருத்துவரை ஒருவர் பின் னொருவராய் வைத்துப் பார்த்து வந்தோம். அவ்வுற்ற நேரத்தில் நாகைக் கோபால கிருஷ்ணனும் நம் அருமைத் திருநாவுக்கரசும் அல்லும் பகலும் எம்மை யகலாதிருந்து பல வகை

உதவிகளுஞ் செய்து வந்தார்கள். நோயானது மிக முறுகிப் பேரிடர் பயப்பதாய் நின்ற ஒருநாளிரவில், இவ்விருவருஞ் சென்று வேறோர் ஆங்கில மருத்துவரை அழைத்து வந்தனர். அப்போது இரவு மணி பதினொன்றுக்கு மேல் இருக்கும். வந்த அம்மருத்துவர் தக்க மருந்து கொடுத்து, வேறு சில நுட்ப முறைகளுஞ் செய்து, கடைசியாகப் பாலிற் கலந்து கொடுக்கப் பனிக்கட்டிகள் வேண்டும் என்றனர். அஞ்ஞான்று யாம் சென்னையில் மண்ணடிக்கு அருகிலுள்ள அரமனைக்காரன் தெருவில் ஒரு வீட்டின் மேன்மாளிகையிற் குடியிருந்தேம். யாம் இருந்த அப்பகுதியில் அந்நேரத்தில் எங்கும் பனிக்கட்டிகள் கிடைக்கவில்லை. அதன் மேல் திருநாவுக்கரசு எப்படியாவது அவற்றைக் கொண்டுவருதற் கெண்ணி, எழும்பூருக்கு அருகிற் பனிக்கட்டி செய்யுந் தொழிற் சாலைக்கே போகப் புறப்பட்டார்; கோபால கிருஷ்ணனும் அவருடன் சென்றார். மின்சார வண்டியாவது குதிரை வண்டி மாட்டு வண்டிகளாவது அந்நேரத்தில் கிடையாமையால் அவர்கள் அந்நள்ளிரவில் கால் நடையாகவே செல்ல வேண்டுவதாயிற்று. யாமிருந்த இடத்திற்கும் பனிக்கட்டித் தொழிற் சாலைக்குஞ் சிறிதேறக்குறைய மூன்று மைல் இருக்கும். இவர்களிருவரும் பனிக்கட்டிகள் வாங்கிக்கொண்டு திரும்பி வருகையில் இரவு மூன்று மணி இருக்கும். இவர்கள் அன்றிரவு செய்த அச்செயற்கரிய உதவியால் எம்மகள் நோய் நீங்கி உயிர் பிழைத்தாள். இங்ஙனம் உற்ற நேரத்தில் எவ்வகை இடைஞ்சலுக்கும் அஞ்சாது நின்று தம்பாலன்புடையார்க்கு உதவி செய்யும் விழுமிய நல்லியல்பு இவர்தம் இறுதி நாளளவும் இவர்க்கிருந்தது. யாம் சென்னையிலிருந்த காலமெல்லாம் யாமும் எம்மைச் சார்ந்தாரும் அடுத்தடுத்துக் குளிர் காய்ச்சலாற் பற்றப்பட்டு வருந்தாநின்றேம். இதனைக் கண்ட திருநாவுக்கரசு "சென்னைக் குடியிருப்புத் தங்களெல்லார்க்குஞ் சிறிதும் இசையாததா யிருக்கின்றது. உடல் நல மன நலங்களுக்கு இசைந்த பல்லாவரமே தங்களெல்லார்க்கும் பொருந்துவதாகும்" என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி எம்மை 1911-ஆம் ஆண்டிற் பல்லாவரத்திற் குடியேற்றி வைத்து உதவி செய்தார்.



இங்ஙனம் பலவகையாலுஞ் சிறந்த தவப்பிறவியினரான நம் அருமைத் திருநாவுக்கரசு நம்மனோரை யெல்லாம் இத்துணை விரைவில் விட்டு நீங்கியதான பெருங்குறை இத்தமிழகத்துக்கு எளிதிற் றீருமோ! எல்லாம் வல்ல சிவபிரான் இவரது சிறந்த உயிருக்கு மறுமை யுலகில் நீண்ட காலம் ஆறுதலைத் தந்தருளி, அதன் பின் இவர் மீண்டும் நம்மிடையே எல்லா வசதிகளோடும் பிறந்து, தாம் அரைகுறையாய் விட்டுச் சென்ற தமிழ்த்தொண்டு சிவத்தொண்டுகளை நன்கினிது முடித்து அதன்மேற் பிறவியெடாராய்ச் சிவபிரான் றிருவடி நீழலில் வைகிப் பேரின்பம் நுகர்ந்திருப்பாராக வென அப்பெருமான் திருவடிப் போதுகளை இறைஞ்சி வேண்டுகின்றேம். இவர் தம் முதன் மனைவிக்குப் பிறந்த ஒரு புதல்வன் உளன். முதன் மனைவி காலமான பின் மணந்துகொண்ட இவர்தம் இரண்டாம் மனைவிக்கு ஐந்து பெண் பிள்ளைகள் உளர். இவர் தம்பியர் இருவர் உளர். இவர்தந் தந்தையார் ஆண்டில் மிக முதியராயிருக்கின்றார். சென்னையில் நம் திருநாவுக்கரசிடம் தமிழ்க் கல்வி பயின்ற இவர்தம் மாணாக்கர் பலர் உளர். அவருட் பாரிப்பாக்கந் திருக் கண்ணப்ப முதலியாரும், சென்னை முத்தியால்பேட்டை உயர்தரக் கல்விச் சாலைத் தமிழாசிரியர் மயிலைத் திரு. முத்துக் குமாரசாமி முதலியாருந் தமிழறிவிற் சிறந்தவர்களாய்த் திகழ்கின்றார்கள்.

---

# போர்க் கருவிகள் போந்த புதுமை

(காழி. சிவ. கண்ணுசாமி. B. A.)

எஃகினாலும் இரும்பினாலுஞ் செய்யப்பட்ட ஆயுதங்களையே பெரும்பாலுந் துணையாகக் கொண்டு முற்காலங்களிற் போர்கள் நிகழ்ந்து வந்தன. இக்காலத்திலோ பெரிய பெரிய தேயங்களின் மக்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து தம் முழு அறிவையும் பயன்படுத்தி இராப்பகலாக உழைத்தாலுங்கூடப் போதிய வளவிற்குப் போர்க் கருவிகளைத் தயாரித்துக் கொள்ள முடியாத வகையிற் போர்கள் நிகழ்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து ஒரு

போரை நடத்துதற்கு வேண்டிய போர்க் கருவிகளைக் கோடிக் கணக்கிற் செய்துகொள்ளக்கூடிய திறமை வாய்ந்திருந்தா லல்லது ஒரு தேயம் மற்றொரு தேயத்தின்மீது கடற்போருக்கோ நிலப் போருக்கோ சென்று வெற்றி பெறுதலென்பது முடியாது; அத்தகையதோர் திறமை யில்லாவிடத்து அத்திறமை வாய்ந்த மற்றொரு தேயத்தையாவது அது தனக்குத் துணையாகப் பெற்றிருந்தால்தான் வெற்றி பெற முடியும்.

இனி, ஒரு மனிதனின் போர்த்திறமையை நன்கு விளக்கி வந்த பண்டைய ஆயுதங்களினால் விளைக்கப்பட்ட கெடுதியைவிட அறிவின் திறமையை விளக்கிவரும் இன்றைய ஆயுதங்களினால் விளைக்கப் பெறும் கெடுதி பன்மடங்கு அதிகமானது என்பது யாவர்க்குந் தெரிந்ததே. ஒன்றுக்கு நூறு பங்கதிகமென இவ்வாறு சாவை யூட்டிவரும் இக்கருவிகள் பல பொருள்களைக் கொண்டு செய்யப்பட்டு வருகின்றன. அப்பொருள்களில் ஒரு சிறிதும் கெடுதல் பயக்காதன வெனத் துணியப்பட்ட ஒரு சிலவும் இருக்கின்றன வென்றும் அவை எவ்வாறு இன்றியமையாதனவாக வேண்டப்பட்டுப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன வென்றும் கூறின் விந்தையாகவே தோன்றலாம். ஆயினும் அது உண்மையே. உணவிலிடும் உப்பும் உடல் கழுவும் 'சோப்' என்னும் சவர்க்காரமுமே வெடிக்கருவிகளைச் செய்ய உதவி வருகின்றன. சோப் உண்டுசெய்வதிலிருந்துதான் வெடிகுண்டிற்கு வேண்டிய முக்கிய பொருள்கள் பெறப்படுகின்றன. அப்பொருள்களைச் சீர்படுத்தப் பயன்படுவது உணவிலிடும் உப்பே. அது எப்படி யெனில், உப்பு என்பது சோடியம் என்ற உலோகச் சத்தும் குளோரின் என்ற ஆவிச்சத்துஞ் சேர்ந்தது. இயற்கையிலேயே இவ்விரண்டுஞ் சேர்ந்ததாக உப்பு நிலத்திலிருந்து வேண்டிய அளவிற்குப் பெறப்படுகிறது. உப்புச் சத்துள்ள ஓரிடத்தில் ஒரு கிணறு தோண்டிவிட்டால் அக்கிணற்று நீரின் வழியாக வேண்டிய உப்பைப் பெறலாம். உப்புநீரைக் காய்ச்சினால் நீர் ஆவியாகப் போய்விட எஞ்சி நிற்பது உப்பென்பது தெரிந்த தொன்றே. உப்பு உணவிற்கு இன்றியமையாத பொருள் தான். ஆனால், குளோரின்' என்ற ஆவிச்சத்தையும் 'காஸ்டிக்சோடா'



என்ற எரிகாரச் சத்தையும் உண்டாக்குவதற்கும் அது மிகவும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. 'குளோரின்' என்ற ஆவிச்சத்தின் உதவியாலேயே ஜெர்மானியர்கள் 'நச்சுப் புகை' என்ற ஒரு ஆவியை யுண்டுபண்ணிப் பெரும்போரில் கானடா தேய மக்களுக்குப் பெருந் தீங்கிழைத்துவிட்டனர். அந் 'நச்சுப்புகை' நிறைந்த இடத்தில் மூச்சு விடுவதென்பதே முடியாது. தப்பித் தவறி மூச்சுவிட முடிந்து பிழைத்துச் செல்வோர்களின் காற்றுப்பைகள் அவர்கள் ஆயுட்காலம் முழுதும் தேருதவாறு கெட்டுவிடும்.

இனி, சவர்க்காரச் சாலைகளில் கொழுப்பு காய்ச்சுவதற்காகப் பெரிய பெரிய செப்புப் பாத்திரங்கள் வைத்திருப்பார்கள். கொழுப்பென்றால் ஆடு மாடுகளின் இறைச்சியிலிருந்து பெறப்படுவது மட்டு மன்று; காய் கறிகளிலிருந்தும் கொட்டைகளிலிருந்தும் பெறப்படுவதையும் அது குறிக்கும். இக்கொழுப்புடன் 'காஸ்டிக் சோடா' என்ற எரிகாரங் கரைத்த நீரைச் சேர்த்துக் குறிப்பிட்ட நேரங் காய்ச்சினால் எரிகாரச்சத்து கொழுப்புடன் கலந்து விடுகிறது. அக்கலப்பு ஏற்பட்டவுடன் இரண்டு புதுப்பொருள்கள் தோன்றுகின்றன.

முதலில் அவ்விரண்டு பொருள்களும் தனியாகப் பிரிந்து தோன்றுவதில்லை; ஒன்றுடனொன்று கலந்தே தோன்றும். ஆனால் ஒரு சிறிது உப்பைக் கரைத்த உவர்நீரை அக்கலப்பில் ஊற்றினாலோ அவ்விரண்டும் தனியாகப் பிரிகின்றன. ஒன்று கட்டியாக மாறி அடியிற் சென்று தங்குகிறது. அதுவே 'சோப்' என்னுஞ் சவர்க்காரம். கொழுப்பும் எரிகாரமுஞ் சேர்ந்த கலப்பு நீரிலிருந்த அது உவர்நீர் சேர்ந்தவுடன் கட்டியாகப் பிரிந்து விடுகிறது. அஃதேனெனின் சவர்க்காரம் உவர்நீரிற் கரையாதாகையினால்தான். இப்பொழுதும் கடலில் சவர்க்காரந் தேய்த்துக் குளித்தல் முடியாது என்பது நன்கு தெரிந்ததே.

மேல் இரண்டு பொருள்கள் தோற்றமுறுகின்றன என்று கூறியதில் "சோப்" என்ற இதுவொன்று நீங்க மற்றொன்று "கிளிஸரைன்" என்பதாகும். இது கொழுப்பும் எரிகார நீரும்

௰௮



உவர்நீருஞ் சேர்ந்த கலப்பு நீரேயாகும். இதை நன்றாக வடிகட்டியபின் சுத்தமான "கிளிஸரைன்" தனியாக எடுக்கப்படும்.

இவை சரி; 'சோப்' என்பதும் 'கிளிஸரைன்' என்பதும் எவ்வாறு உண்டாக்கப்படுகின்றன வென்பது தெரிந்தது; ஆயினும் அவற்றிற்கும் போர்க் கருவிகளுக்கும் என்ன தொடர்பே தெரியவில்லையே என்று கேட்கலாம். கிளிஸரைனுடன் 'ஸல்யூரிக் ஆஸிட்' என்ற கந்தகப் புளிப்பையும் 'நைட்ரிக் ஆஸிட்' என்ற தீப்புளிப்பையுஞ் சேர்த்து வெடி மருந்துகள் செய்யப்படுகின்றன. கிளிஸரைனில் "ஆக்ஸிஜன்" என்ற உயிர்வளியும் "ஹைட்ரஜன்" என்ற நீர்வளியும் "கார்பன்" என்ற கரியும் கலந்திருக்கின்றன. ஆகவே இக்கலப்புடன் ஒரு சிறிது "நைட்ரஜன்" என்ற தீவளியைச் சேர்த்தால் வெடி பொருள்கள் செய்து கொள்ளலாம். இந்தத் தீவளியும் கிளிஸரைனும் சேர்ந்த கலவைக்கு 'நைட்ரோ கிளிஸரைன்' என்று பெயர். இக்கலவையே எத்தகைய வெடி பொருட்கும் அடிப்படையாகும். இனி வெடிமருந்துகள் உண்டாக்கப் படுவதைப் பற்றி அடுத்த இதழில் விவரிப்பாம்.

---

## மணி. திருநாவுக்கரசு முதலியார்

நமது செல்விக்கு முதலாவது ஆண்டில் ஆசிரியராயிருந்தவரும், தென்னாடு முழுதும் 'சொன்மாரி' என்று யாவராலும் பாராட்டப்பட்டவரும், நல்லியல்பும், கூர்த்த அறிவும், உயர்ந்த ஆசிரியத்தன்மையும், செந்நாப்புலமையும் மிக்குடையவரும் ஆகிய திரு. முதலியாரவர்கள் தமது இளம்பருவத்திலேயே 23—5—1931 சனிக்கிழமையன்று உயிர் துறந்தமை கேட்டு உளமிக வருந்தினோம். மறுமையுலகில் அவர்களுடைய உயிர் சிவமணத்திற்படிக. அவர்களுடைய குடும்பத்தவருக்கும், நண்பர் குழுவினருக்கும் எங்கள் ஆராத்துயரத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார்.

---

மணி. திருநாவுக்கரசு முதலியார் வரலாறு    ரூ. 0—8
பல்பொருட் கட்டுரைகள் (மணி. திருநாவுக்கரசு முதலியார் இயற்றியது)    ரூ. 1—0
இவை நமது கழகத்தில் கிடைக்கப்பெறும்.

197645

## புதிய கழக வெளியீடுகள்

1. ஜினேவாவீரன் அல்லது அமெரிக்காவைக் கண்டு பிடித்த கோலம்பசு வரலாறு:—
   திரு. T. S. பாலசுந்தரம் பிள்ளை எழுதியது.    அணா 6
2. நளாயனி அல்லது நங்கையர்க்கரசி:—
   பண்டிட் திரு. A. நடராச பிள்ளையவர்கள் எழுதியது.    அணா 7
3. பத்துப்பாட்டில் ஒன்றாகிய முல்லைப்பாட்டு
   நச்சினார்க்கினியருரையும் விளக்கமும்    அணா 10
4. பொன் கதைக் கொத்து
   திரு. க. ப. சந்தோஷ் எழுதியது    அணா 4
5. மின்சார வல்லுனர்

## தோமாஸ் ஆல்வா எடிசன்

இவர் அமெரிக்காவில் 1847-ஆம் ஆண்டில் பிறந்து இன்னும் உயிரோடிருப்பவர். பத்திரிகை விற்கும் பையனாக இருந்து பார்புகழும் பதவியைப் பெற்றவர். ஊணுறக்கமின்றி உழைத்துப் பெரும்புகழ் படைத்தவர். 'பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே' என்ற பெரியார் திருமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இவரது வாழ்க்கை வரலாறே.

மந்திரவாதி என்று மதிக்குமாறு மின்சார அற்புதங்களை இயற்றியவர். தந்காலத் தந்தியைப் படைத்தவரும், மின்சார விளக்குகளை உலகெங்கும் பரவச் செய்தவரும் இவரே. பேச்சுத் தந்தியும், கம்பியில்லாத் தந்தியும் கண்டு பிடித்தவர் இவரே. பேசும் கருவியை முதலில் இயற்றியவரும் இன்னும் எண்ணிறந்த புதுமைகளைக் கண்டு பிடித்து உலகில் அழியாப் புகழ் படைத்தவரும் இவரே.

இவரது வாழ்க்கை வரலாற்றால் நாம் அறியற்பாலன. 'வறுமையுஞ் சிறுமையும் பெருமைக்குத் தடையாகா' என்பதும், குன்றாத ஊக்கமும் தளர்வுபடா முயற்சியுமே வெற்றிக்குப் போகும் வழிகள்' என்பதும், 'பிறப்பன்று சிறப்பே நலந்தரும்' என்பதும், 'தாயைப் போலவே பிள்ளை' என்பதும், ஆம்.

இதனை எளிய இனிய நடையில் மொழிபெயர்த்து எழுதியவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமையுடைய வேலூர் திரு. க. ப. சந்தோஷ் அவர்களாவர்.

இவரது வரலாறு படிக்கப் படிக்க மிகவும் இன்பமாயிருக்கும். ஆப்டோன் படங்களுடன் அழகிய புதிய பதிப்பு.

கிளேஸ் காகிதம் ராப்பர் கட்டிடம் ரூ. 0 12
ஆண்டிக் காகிதம் கலிக்கா கட்டிடம் ரூ. 1 4

# தமிழ்க்கடல் வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| முதற்பாகம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மூவர் உரையுடன் | 1 | 0 |
| 2-ம் பாகம் வெற்றிவேற்கை, உலகநீதி, நீதிவெண்பா உரையுடன் | 1 | 0 |
| தமிழ் விடுதூது (மதுரைச் சொக்கநாதர்) உரையுடன் | 0 | 5 |
| மதுரைச் சொக்கநாதருலா (புராணத் திருமலைநாதர்) உரையுடன் | 0 | 6 |
| வண்டு விடுதூது (கச்சியப்ப முனிவர்) உரையுடன் | 0 | 8 |
| வள்ளிகாந்தன் தோத்திர மஞ்சரி | 0 | 8 |
| வைகாருண்ய விளக்க வினாவிடை : இதன் கண் விரிந்த பொருள்களும் மேற்கோள்களும் பொதிந்து கிடக்கின்றன | 1 | 0 |
| தேவி தோத்திர மஞ்சரி | 0 | 4 |
| ஆராய்ந்தெடுத்த 600 பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும் | 0 | 6 |
| தென்னாட்டுக் கோயில் புத்தகங்கள் முதற்பாகம் விலை அணா 0-5 இரண்டாவது பாகம் | 0 | 5 |
| ஹென்ரி போர்டு வரலாறு | 1 | 8 |

உங்கள் பிள்ளைகள் [illegible] வேண்டுமானால் **தமிழ் நீதி அட்டைகளை** உடனே வாங்கி உங்கள் வீடுகளிலும் கல்லூரிகளிலும் தொங்கவிட்டு அலங்கரியுங்கள்.

'அறஞ்செய விரும்பு' 'இன்சொல் இயல்பு' என்பன போன்ற 25-நீதிகள், இரு கலர்களில் அச்சிட்டு, [illegible] அட்டையில் ஒட்டப் பெற்றிருக்கின்றன.

தனி நீதி அட்டை விலை 0 2 | 1. செட் நீதிக்காட்சிகள்
12. நீதி அட்டைகள் விலை 1 8 | தட்டில் 0 12
1. செட் 25 ,, விலை 3 0

குறிப்பு:—ஒரு செட்டுக்கு மேல் ஆர்டர் அனுப்புகிறவர்கட்கு ரூ. 1-க்கு 2 அணா வீதம் கமிஷன் தரப்படும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed by A. Rangaswamy at The Progressive Printers,
2-17, Coral Merchant Street and Published by N. Subbiah for
The S. I. S. S. W. P. Society, [illegible]